Jc
Δ 23 ma2ll, N32
N76.35.2
227132

# ஞானசம்பந்தம்


தருமையாதீனத் திங்கள் இதழ்

5 ] இராக்ஷச ஆண்டு மார்கழித்திங்கள் 10—1—76 | இதழ் 2



லாம் பசியும் - நோயும் நீங்கி - வசியும் வளனும் சுரக்க அருள்பாலிக்கும்
அன்னை தானியலட்சுமியின் திருத்தோற்றம் "
உழவர் திருநாளாகிய பொங்கல் திருநாளில் காட்சி தரு

தருமையாதீனக்குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

எப்போது மும்மலம்விட்
டேறுவேன் பூரணமாய்
எப்போதுன் இன்பசுகத்
தெய்துவேன்—எப்போதும்
நித்தியா சுத்தா நிராமயா
சொல்தவருச்
சத்தியா சொக்கநா
தா.

–சொக்கநாத வெண்பா–12.

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகா வித்துவான்
...வடிவேல் ...சிரியர்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 35 ‖ 10–1–76 ‖ இதழ் 2

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | பொங்கல் வாழ்த்து | |
| 2 | பொங்கல் விழாவின் புனிதப் பண்பு ... | 54 |
| 3 | தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய ஆசியுரை ... | 58 |
| 4 | சமய ஆட்சியும் நாட்டாட்சியும் ... | 64 |
| 5 | ஆசாரக்கோவை ... | 70 |
| 6 | கண்கட்டி ஸ்ரீ மறைஞானசம்பந்த நாயனார் ... | 77 |
| 7 | திருவெண்காடு – கீழைத்திருக்காட்டுப் பள்ளி ... | 81 |
| 8 | மார்கழிமாதத் தல வழிபாடு ... | 89 |
| 9 | செய்திகள் ... | 94 |
| 10 | மாத ஜன்மநட்சத்திர வழிபாடு ... | 96 |
| 11 | எதிர்காலம் ... | 97 |
| 12 | பார்வையாளர் குறிப்பு நகல் | 76, 88 |
| 13 | கடிதம் ... | 101 |

உ

சிவமயம்

# "பொங்கல் வாழ்த்து"

( புலவர். திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ., )

பால்பொங்க ; சிவனருளே பரந்து பொங்க ;
பண்பட்ட தமிழ்பொங்க ; பாரில் எங்கும்
நால்வேத நெறிபொங்க ; நன்மை பொங்க ;
நானிலத்தில் வான்கருணை மழையும் பொங்க ;
கால்கொண்ட தமிழ்வாழ்வில் கடமை பொங்க ;
கன்னியர்க்கும் நல்வாழ்வு கனிந்து பொங்க ;
வேல்கொண்டான் தாதையருள் விளங்கிப் பொங்க ;
விரைந்திட்ட தைப்பொங்கால் வாழி ! வாழி !!

மங்கலங்கள் சிவனருள்போல் மண்டிப் பொங்க ;
மரபுநெறி சைவத்தின் மாட்சி பொங்க ;
எங்கெங்கும் இன்பங்கள் எழுந்து பொங்க ;
எல்லார்க்கும் எல்லாமும் இணைந்து பொங்க ;
பொங்கிவரும் காவேரி பூத்துப் பொங்க ;
பூவுலகில் அறம்பொங்க ; தருமம் பொங்க ;
மங்காத ஆநிரைகள் மாட்சிப் பொங்க ;
மணஞ்சேர்த்த தைப்பொங்கால் வாழி ! வாழி !!

குருவருளும் திருவருளும் கூடிப் பொங்க ;
கோயிலெலாம் பக்திநெறி குலவிப் பொங்க !
திருநாட்டில் நல்லாட்சி தினமும் பொங்க ;
திறமான புலமைநெறி திகழ்ந்து பொங்க ;
அருங்கலைகள் தமிழ்மண்ணில் ஆர்த்துப் பொங்க ;
அன்புநிலை அறநெஞ்சில் அமைந்து பொங்க ;
பெருந்தமிழர் வாழ்வுக்கு விருந்து வைத்த
பெருமைமிகு தைப்பொங்கால் வாழி ! வாழி !!

அஞ்சாமை திருநாட்டில் ஆர்த்துப் பொங்க ;
அறங்கூடி ஒன்றாக அழகாய்ப் பொங்க ;
துஞ்சாது மானிடத்தின் வீறு பொங்க ;
துயரற்ற நல்வாழ்வு துள்ளிப் பொங்க ;
எஞ்சாது பணியாற்றும் இனிய ஏடு
எழில் 'ஞான சம்பந்த' அன்பர்க் கெல்லாம்
நெஞ்சார நல்வாழ்த்துக் கூறி வந்த
நினைவகலா தைப்பொங்கல் வாழி ! வாழி !!

## "ஞானசம்பந்தம்" திங்கள் இதழ்

# சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து திங்கள்தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி சிவஞானத்தேன் நிறைந்து கற்போர் கருத்தைக்கவர்ந்துவரும் "ஞானசம்பந்தம்" முப்பத்து நான்காவது ஆண்டின் நிறைவைப்பெற்று முப்பத்து ஐந்தாவது ஆண்டில் மிக்க எழிலுடன் வெளிவருகிறது.

10—11—75 இல் வெளிவந்த இதழுடன், "ஞானசம்பந்தம்" இதழின் ஆண்டு நிறைவுற்றதால் இவ்வாண்டுக்குரிய சந்தா செலுத்தாத பழைய சந்தாதாரர்கள் தனி அறிவிப்பை எதிர்பாராமல் மீண்டும் தொடர்ந்து ஆண்டுக் கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் "ஞானசம்பந்தம்" இதழைப் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக.

வேலை மிகுதியினாலோ அல்லது மறதியினாலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடையில்லாமல் ஞானசம்பந்தம் பெற வாய்ப்பளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா அறிவிப்புச் செய்தது முதல் இன்று வரை 348 அன்பர்களுக்கு மேலாக ஆயுள் சந்தா செலுத்திப் பலர் ஆயுள் உறுப்பினராகி உள்ளனர்.

ஆயுள் சந்தா செலுத்தினால் அவர்களது வாரிசுகளும் ஞானசம்பந்தம் பெற வசதி செய்து தரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ, கல்வி அற நிறுவனங்களுக்கோ மாற்றிக்கொடுக்க விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச்சேர்ந்து ஞானசம்பந்தம் பெற்றுப் பயன் அடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக் கொள்ளுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுச் சந்தா (உள்நாடு) | .... | ரூ. | 6—00 |
| ஆண்டுச் சந்தா (சிலோன்) | .... | ரூ. | 7—00 |
| ஆண்டுச் சந்தா (வெளிநாடு) | .... | ரூ. | 10—00 |
| ஆயுள் சந்தா | .... | ரூ. | 100—00. |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :— செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் 609001
தஞ்சை மாவட்டம்.


உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 35 | இராக்ஷச — மார்கழி — 10—1—76 | இதழ் 2


திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## பொங்கல் விழாவின் புனிதப் பண்பு

**உழவர் திருநாள் :**

உழைப்பே உயர்வுதரும் என்பதுசமுதாயம் கண்ட உண்மை. ஊக்கத்தோடு உழைப்பவனுடைய இல்லத்திற்கு வழி கேட்டுக்கொண்டு திருமகள் சென்று சேர்வாள் என்பர் திருவள்ளுவர். உலகில் உள்ள தொழில்களிலெல்லாம் உயர்ந்த தொழில் உழவே. உயிர்களுக்கெல்லாம் உணவு வழங்கும் இதனினும் மேம்பட்ட தொழில் இல்லை. உழவர்கள் முயற்சியில் விளையும் தானியங்களே வாணிகத்திற்கு அடிப்படையாக அமைகிறது. எனவே, வாணிகம் உழவினை நம்பி அமைவதை அறிகிறோம். போர்முனை வெற்றிகள் யாவும் ஏர்முனை தந்த வளமேயாகும். மன்னனின் வெற்றி போர்முனையில் அமைகிறது. ஆனால் போர்முனையின் வெற்றி உழவர்களாகிய வேளாளர்களது உழைப்பில் அமைந்து கிடக்கிறது. கல்வியும் அறமும் செறிந்த சான்றோர்கள் உலக நடையை உருவாக்குகின்ற தலைமையுடையவர்கள் ஆயினும்,

அவர்கள் வாழ்க்கையும், அவர்களது நெறிகளின் மலர்ச்சியும் உணவினை அடிப்படையாகக்கொண்டே அமைவதனை ஆழ்ந்து சிந்தித்தால் அறியலாம். எனவே, சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரையும் செயற்படுத்தும் ஆற்றல் மிக்கவர்கள் வேளாளர்களே என்பது புலனாகும். இதனால்தான்

'சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழன்றும் உழவே தலை'

என்றும்,

'உழுவார் உலகத்தார்க் காணி அஃதாற்று
தெழுவாரை எல்லாம் பொறுத்து'

என்றும் திருவள்ளுவர் புகழ்ந்து போற்றினார். விவசாயத்தைத் தலைமையாகக்கொண்ட நாடு இந்தியா. எனவே, உழைப்பின் திருநாளாகிய பொங்கல்திருநாள் நாடெங்கும் கொண்டாடப்பட வேண்டிய சிறப்புடையது.

நன்றி உணர்வு மிக்கவர்கள் தமிழர்கள். பிறபாவங்கள் எல்லாவற்றிற்கும் கழுவாய் உண்டு. செய்ந்நன்றி கொன்றால் கழுவாய் இல்லை என்று நம்பியவர்கள் அவர்கள்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்பது தமிழர்களின் உயர்ந்த நோக்கத்தினைக் குறிக்கும் வள்ளுவர் வாக்கு. தமிழர்கள் வாழ்வில் வரும் நன்றித் திருநாள் பொங்கல். மார்கழியின் இறுதிநாளில் தொடங்கி நான்கு நாட்களுக்குத் தமிழ் மக்கள் இத்திருநாளைச் சிறப்புடன் கொண்டாடுகின்றனர். விழாக்களை மகிழ்வோடு கொண்டாடுவதோடு, தத்துவம் புரிந்து கொண்டாடுவது மேலும் மகிழ்வினையும் பயனையும் விளைவிக்கும்.

## போகிப்பண்டிகை :

மார்கழியின் இறுதிநாளை 'போகிப்பண்டிகை' என்று கொண்டாடுகின்றோம். இன்று மக்கள் இந்நாளைத் தூய்மைப் படுத்தும் முயற்சியில் செலவிடுகின்றனர். போகி என்ற சொல் "எல்லாவித[illegible] போக[illegible]களுக்கும் தலைவன்' என்ற பொரு[illegible] தேவர் தலைவனாகிய இந்[illegible]னைக் குறிக்கும். 'போகி — இந்[illegible]ன் பாம்பு' என்பது நிகண்டு. இ[illegible]திரனுக்குப் பெருவிழா

227132
சென்னை-600 008



காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்று வந்ததைச் சிலப்பதிகாரம் விளக்குகிறது. நான்கு நிலங்களுக்கும் தெய்வங்களைக் கூறும் தொல்காப்பியர்,

'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்'

என மருத நிலத்தின் தலைவனாக இந்திரனைக்குறித்தார். தமிழ்நாடு நிலவளம் மிக்கது. நிலவளமெல்லாம் நீர் வளத்தால் அமைவது.

'உணவெனப் படுவது நிலத்தொடு நீரே'

என்கிறது புறநானூறு. உழுதொழிலையே நம்பியிருந்த தமிழர்கள், வற்றாத விளையுளை வழங்கும் மருதநிலத்தலைவனாகிய இந்திரனுக்கு எடுத்த நன்றித் திருநாளே போகிப் பண்டிகையாகும்.

## சூரிய வழிபாடு :

மழையும், விளைவுமெல்லாம் சூரியனின் கொடையால் அமைவன. விருப்பு வெறுப்பற்று நிற்கும் நிலையில் ஆதவனை அறக் கடவுளாகவேகருதுவர் திருவள்ளுவர். ஆதவனின் ஒளியின்றேல் பயிர் முளையில் பசுமையும் தோன்றாது. அறுவடை கொண்டு மகிழ்ந்த தமிழ்மக்கள் கதிரவனுக்குத் தைத்திங்கள் முதல் நாள் பொங்கும் தங்கள் உள்ளத்து நன்றியினைப் பொங்கல் திருநாளாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். ஆதவன் தோன்றியபின்னர், முற்றத்தில் பானைவைத்துப் பொங்கலிட்டு, ஆதித்தர் பன்னிருவரை மகிழ்விக்கும் முயற்சியில் பன்னிரண்டு படையலிட்டு, சூரியனுக்குக் கற்பூரம் காட்டி வழிபடுவதை இன்றும் காண முடிகிறது. மருதநில விளைவாகிய செந்நெல் அரிசி, கரும்பின் கட்டி, மஞ்சள், இஞ்சி, கரும்பு, வாழைப்பழம் முதலியன பொங்கல் விழாவின் படையலில் இடம்பெறுகின்றன. எனவே, பொங்கல் ஆதவனுக்குச் செய்யும் நன்றிப் பெருவிழா என்பது புலனாகிறது.

## மாட்டுப் பொங்கல் :

உழவனின் உற்ற தோழன் ஆநிரைகள். பால் பயன் நல்கும் பசுக்களும் உழைப்பை நல்கும் எருதுகளும் இன்றேல் மனித வாழ்க்கை நிறைவு பெற்றிருக்க முடியாது. கைம்மாறு கருதாது உழைக்கும் மாடுகள் நன்றிக்குரியன. பயன்களை எல்லாம் உழவனுக்குநல்கி, எச்சத்தை ஏற்று மகிழும் அதன்திறம் போற்றத்தக்கதாயிற்று. வயலிலும், களத்து மேட்டிலும் உடனிருந்து உழைத்த ஆநிரைகளுக்கு நன்றிப்பெருக்கால் தமிழர்கள் எடுத்த விழாவே தைத்திங்கள் இரண்டாம் நாளில் நடைபெறும் மாட்டுப் பொங்கல் என்பது வெளிப்படை.

### கன்னிப் பொங்கல் :

தைத்திங்கள் மூன்றும் நாள் நடைபெறும் விழா கன்னிப் பொங்கல் எனப்படுகிறது. இதனை இன்று 'கன்றுப் பொங்கல்' என்றும் 'காணும் பொங்கல்' என்றும் மக்கள் மரபு பிறழ வழங்குகின்றனர். கன்றுப்பொங்கல் என்பது கன்றுக்குட்டிகளுக்காகுமானால் அது மாட்டுப்பொங்கலிலேயே அடங்கிவிடும். 'காணும் பொங்கலில்' ஒருவர் மற்றவரைச் சென்று கண்டு வணங்குவதைச் சிலர் மரபாகக் கொண்டுள்ளனர். பொங்கலன்றோ, அல்லது மாட்டுப்பொங்கல் நாளிலோதான் பெரியோர்களை வணங்கி ஆசிபெறுவது பெரும்பாலான இடங்களில் வழக்கமாக இருக்கிறது. மேலும் காணும் நாள் என்று இல்லாமல் காணும் பொங்கல் என்று வழங்கவும் வாய்ப்பில்லாதுபோகிறது. எனவே, கன்னிப் பொங்கல் என்பதே வழக்காகிறது.

### நோன்பின் நிறைவு :

திருமணமாகாத தமிழகத்துக் கன்னிப்பெண்கள் மார்கழித் திங்கள் நாட்காலையில் நீராடி நோன்பிருந்து சிறந்த கணவன் கிடைக்கப் பிரார்த்தித்திருந்ததைத் திருவெம்பாவையும், திருப்பாவையும் அழகுற விளக்குகின்றன. தாங்கள் மேற்கொண்டிருந்த நோன்பினை நிறைவு செய்யும் கன்னிப் பெண்கள் பொங்கலிட்டுத் தத்தம் சமய மரபுக்கேற்ப இறைவனுக்குப் படைத்து மூடநெய்பெய்து முழங்கைவழி யொழுகக் கூடியிருந்து உண்டு மகிழ்வதையே இத்திருநாள் குறிக்கிறது. கன்னிப் பொங்கலன்று பெண்கள் தாயரொடு உடன்சென்று நீராடி ஆற்றுத்துறைகளில் பொங்கலிட்டு வழிபடுவதை இன்றும் காணலாம். 'இதனையே தாய் அருகாநின்ற தைந்நீராடல்' என இலக்கியங்கள் குறித்திருக்க வேண்டும். வேறு மங்கலச் செயல்களில் ஈடுபடாது வழிபாட்டில் நாட்டம் செலுத்த அமைந்த பீடுடைய மார்கழியினைப் 'பீடை' மாதம் என்பர் அறியார். அதுபோல முதல்நாள் இந்திரனுக்கும், இரண்டாம்நாள் சூரியனுக்கும், மூன்றும்நாள் மாடுகளுக்கும் பொங்கலிட்டுப் படைத்தது போலன்றி, ஒப்பற்றபரம்பொருளுக்குக்கன்னியரை முன்னிறுத்திப் பொங்கலிட்டுப் படைத்தநாளில் வேறு மங்கலச்செயல்களில் ஈடுபடாதிருத்தல் வேண்டிக் 'கரிநாள்' என்று கூறியுள்ளனர்.

உள்ளத்தில் மகிழ்ச்சிப் பெருக்கெடுக்கும் போதிலெல்லாம் அந்த மகிழ்ச்சிக்கு அடிகோலியவர்களை நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்து போற்றி உய்யவேண்டுமென்பதே தமிழர் திருநாளாகிய பொங்கல் விழாவின் புனிதப் பண்பாகிறது. இந்நன்னாளைக் கொண்டாடி மகிழும் எல்லோருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

உ

குருபாதம்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

வழங்கியருளிய

# ஆசியுரை

( 27—10—75 )

### குருபூசைத் திருநாள் :

இன்று, தருமையாதீன வரலாற்றில் பொற்காலம் கண்ட 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் நான்காம் ஆண்டுக் குருபூசைத்திருநாள். இந்நன்னாளில் அவர்கள் செய்தருளிய தூய தொண்டுகளை நினைவு கூர்ந்து அவர்கள் காட்டியருளிய வழியில் மேலும் அருளறப்பணிகள் பலவற்றை இயற்ற நாம் உறுதி கொள்ளவேண்டும்.

### நல்லறிவு புகட்டுதல் :

இங்கே குழந்தைகள் பலர் கூடியிருக்கிறார்கள். வருங்கால உலகை உருவாக்கும் இத்தகு குழந்தைகளுக்கு நல்ல அறிவையும், ஒழுக்கத்தையும் இளமையிலேயே நாம் கற்பிக்கவேண்டும். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் போன்றது. குழந்தைகளின் இளமைப்பருவத்திலேயே பெற்றோர்கள் அவர்கள் உள்ளத்தில் நல்ல உணர்வுகளை வளர்க்க வேண்டும். பள்ளியிலும், சமுதாயத்திலும் குழந்தைகளுக்கு நல்லறிவுபுகட்டப்படுகிறது. ஆனாலும் தாங்கள் சிறிதும் முயற்சி மேற்கொள்ளாது மற்றவர்களைக் குறைகூறுவது மக்களில் பலருக்கு வழக்கமாகிவிட்டது. பொதுவாகவே தவறுகளைத் தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளாது மற்றவர்கள் மேல் சுமத்துவது இன்றைய நிலையில் எங்கும் காணப்படுகிறது.

---

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூசை விழாவில் வழங்கியருளியது.

## நன்மை தீமைகள் :

இறைவழிபாடு - சமயவிரிவுரை போன்ற நன்மைதரும் செயல்களைப் பின்பற்றவோ, கேட்கவோ மக்கள் விரும்பிக் கூடுவதில்லை. திரைப்படம் முதலிய கேளிக்கைகளைக்காண மக்கள் திரண்டு செல்வதுபோல் நற்செயல்களில் ஈடுபடுவதில்லை. காரணம் கேட்டால், தூரம் அதிகமாக இருக்கிறது; திரும்பிச்செல்ல வசதியில்லை; மழை வரும்போல் இருக்கிறது என்றெல்லாம் கூறுவர். நல்ல செய்திகளைக் கேட்க விருப்பம் இல்லை என்பதனை ஒத்துக்கொள்ள கூச்சப்பட்டுக் கொண்டு வேறு காரணங்களைக் கூறுகின்றனர். இரவு இரண்டாம் காட்சி பார்த்துவிட்டுக் கைக்குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு நள்ளிரவில் நெடுந்தூரம் நடந்து வீடு போய்ச் சேருவதை நாம் இன்றும் காண்கிறோம். பொதுவாக நன்மைகளைவிட தீமைகள் மக்களுக்குக் கவர்ச்சியுடையதாகிவிட்டது. இந்த நிலை மாறி அறச்செயல்களிலும் இறைவழிபாட்டிலும் மக்கள் அதிகமாக ஈடுபடவேண்டும்.

## அறநிலையங்களின் பணி :

உலக வழக்கில் மக்கள் ரயில் தவறிவிட்டது! பஸ் தவறிவிட்டது எனக்கூறக்கேட்கிறோம்! உண்மையில் ரயிலோ, பஸ்ஸோ தவறவில்லை. அவை குறிப்பிட்ட நேரத்தில்தான் செல்கின்றன. மக்கள்தான் தாமதமாகச் சென்று அவற்றை விட்டுவிடுகிறார்கள்; பழியை அவற்றின்மேல் சுமத்துகின்றார்கள். எவற்றிற்கும் பிறர்மேல் பழி சுமத்துவதை மக்கள்குறைத்துக்கொண்டு தங்கள் பிழைகளைத் திருத்திக்கொள்ள முன்வரவேண்டும். இத்தகைய எண்ணங்களை வளர்க்கப் பாடுபடுகின்றன அறநிறுவனங்கள். மக்களின் உள்ளத்தில் இருக்கும் மாசுகளைத்துடைத்து உயிர் வளர்ச்சியைப் பேணுமாறு செய்யும் தொண்டினை நமது சமயபீடங்களும், திருக்கோயில்களும் ஏற்றுக்கொண்டுள்ளன.

## வரையறுத்த கடமைகள் :

சமய நிலையங்களாகிய ஆதீனங்கள், அவற்றிற்குரிய கடமைகளை இயன்றவரை செய்து வருகின்றன. மருத்துவமனை அமைத்தல், பள்ளிக்கூடங்கள் கட்டுதல்போன்ற சமூக-சமுதாயப் பணிகளை இந்த அறநிலையங்கள் மேற்கொள்ளவில்லை எனக் குறைகூறுவாரும் உண்டு. அவர்களுக்கு ஓர் உண்மையினை விளக்கவேண்டுவது நமது கடமை.



வறுமையை அகற்றுதல், உணவு அளித்தல், உடை கொடுத்தல், கல்வி புகட்டுதல், மருத்துவ உதவிபுரிதல், சுகாதாரம் பேணிக்காத்தல் போன்ற மக்களிடையே செய்யக் கூடிய சமுதாயப் பணிகள் பலவுள்ளன. இருப்பினும் இவை மட்டுந்தான் சமுதாயப் பணிகள் என்று கூறிவிடமுடியாது. மக்களை நன்னெறியில் ஒழுகச்செய்வதும் இன்றியமையாத சமுதாயப் பணியாகும். இதற்கு உயிர்நாடியாக இருப்பது ஒழுக்க நெறிகளைப் போதித்து மக்களைக் கட்டுப்பாட்டுடன் வாழச்செய்வதேயாகும்.

ஒருவர் உரிமையில் மற்றவர்தலையிடுவது, பிறர் உழைப்பால் உயர முற்படுவது, பிறர் வளங்கண்டு பொறாமை கொள்ளுதல், அளவிற்குமேல் அனுபவிக்க ஆசைப்படுதல் முதலியவற்றைக் களைந்து மக்களை நன்னெறியில் ஒழுகச் செய்ய வேண்டும்; இறையுணர்வு தலைப்படவும், ஒழுக்கம் கட்டுப்பாடு இவற்றை மேற்கொள்ளவும் செய்யவேண்டும். இவற்றை அறவுபதேசங்களாலும், எழுத்தாலும், பேச்சாலும், காட்சி வகையாலும் அறநிறுவனங்கள் இயன்றவரை செய்துவருகின்றன. அறநிறுவனங்களின் வருவாய் இவற்றை, முழுமையாகச் செய்ய இயலாத நிலையில் இருக்கின்றது.

மக்களின்புறவாழ்க்கையினைப் பேணிப்பாதுகாக்கிறது அரசு. அரசு பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பெற்றுச் செயல்படுகிறது. மருத்துவம், விவசாயம், கல்வி என்ற பலதுறைகளும், அவற்றிற்கு என வரையறுக்கப்பெற்ற செயல்முறைகளும் பணிகளும் உள்ளன. மருத்துவத்துறையில், விவசாயத்துறையின் செயற்பாடுகளை எதிர்பார்ப்பதோ, வருவாய்த்துறையில் மருத்துவத்துறையின் செயற்பாடுகளை எதிர்பார்ப்பதோ இல்லை. அவ்வாறு எதிர்பார்ப்பதும் போதிய மனவளர்ச்சி இல்லாமையையே காட்டும்.

ஒரு ஆசிரியனிடம் கல்வியினை எதிர்ப்பார்ப்பதே முறை. அவனை அன்னதானம் செய் என்று வற்புறுத்தக் கூடாது. அதனால் ஆசிரியன் அன்னதானம் செய்யக்கூடாது என்பது கருத்தல்ல. ஆனால், அதனையே அவன் செய்து கொண்டிருக்க இயலாது. அது நடைமுறையும் கடமையும் ஆகாது. இவை போல இன்று உள வளர்ச்சிக்கும், உயிர் வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணித்துக்கொண்டு பணியாற்றி வரும் அறநிலையங்களிடமும், ஆதீனங்களிடமும், எல்லாவிதமான சமூகத் தொண்டுகளுக்கும் வளர்ச்சிப்பணிகளுக்கும் உதவிஎதிர்பார்க்கப்படுகிறது மேலும் இவை சமூகவளர்ச்சி நிலையங்களாகவே இயங்க வேண்டுமென்பதும் சிலரது நோக்கமாகவும் தெரிகிறது.

## உயிரும் உடம்பும் :

புறத்தை இயக்குவது அகம். அகமே காரணம். புற உறுப்புக்கள் காரியம். காரணமின்றிக் காரியங்கள் உலகத்தில் நிகழா. நுண்பொருளாகவும், வெளிப்பட்டுத் தோன்றாததாகவும் மூளை, இருதயம்போன்ற அகக்கருவிகள் இருக்கின்றன. புற உறுப்புக்கள் யாவும் விளங்கித் தோன்றுகின்றன புற உறுப்புக்களின் இயக்கத்திற்கெல்லாம் உள்ளுறுப்புக்களே காரணம். ஆனால், புற உறுப்புக்களின்செயல்களே வெளிப்பட்டுத்தோன்றும். அகஉறுப்புக்கள் உள்ளிருந்து அடக்கமாகத் தம்பணிகளை ஆற்றுகின்றன. புறத்தே தோற்றமளிப்பது உடல்; அதனிடம் நுண்ணிலையில் மறைந்திருந்து அதனை இயக்குவது உயிர் இறையருள் பெற்று உயிர் உய்வதே இவ் உடலெடுத்ததன் பயனும். உயிர் உய்தி பெறவில்லையானால் உடல் பெற்றதால் உள்ள பயனை உயிர் அடையாமல்போகிறது.

" உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே "

என அழகுற விளக்குவர் இத்தகு உயிராகத் திகழ்வதே அற நிலையங்களும் ஆதீனத் திருமடங்களும். உடலாகத் திகழ்வதே அரசு

## சிறு கூறுகள் :

மனித வாழ்க்கை இரண்டு கூறுகளையுடையது. ஒன்று அக வாழ்க்கை, மற்றொன்று புறவாழ்க்கை; புறவாழ்க்கையின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே அரசும் அதன் முயற்சிகளும் அமைகின்றன. அதுபோல மக்களின் அகவாழ்க்கையினைச் செம்மைப்படுத்தும் பெரும்பணி அறநிலையங்களுக்கும் ஆதீனத்திருமடங்களுக்கும் உண்டு. செல்வச்செழிப்புமிக்க அமெரிக்கா போன்ற நாடுகளில் மக்கள் புறவாழ்க்கையில் வெறுப்புற்று மன அமைதி நாடிஆன்மீக தாகமுற்றுத் தேடி அலைவதைக் காணுகின்றோம். நாம் யார் ? எங்கிருந்து வந்தோம் ! நன்மை தீமைகள் அமையக் காரணம் என்ன ? அமைதிக்கு வழியாது என்பன போன்ற உயிர் பற்றிய ஆன்மீகச் செய்திகளை – தத்துவக்கோட்பாடுகளை மக்களுக்கு அறிவுறுத்தவும், அவர்கள் உள்ளத்தே ஞான விளக்கினை ஏற்றவுமே அறநிலையங்கள் பாடுபட்டு வருகின்றன. சாத்திரங்கள், தோத்திரங்கள், சொற்பொழிவுகள்,



வெளியீடுகள், அறிவுரைகள் முதலிய பல்வேறு நிலைகளில் உயிர் வளர்ச்சிக்கு நமது தருமை ஆதீனம் கடந்த நானூறாண்டுக் காலத்தில் ஆற்றிவரும்பணிகள் உலகறிந்தவை.

## வேந்தன் கடமை:

எனவே, அரசு அறநிலையங்களைக் கண்காணித்தல் கூடாது என்பது கருத்தல்ல. ஒருபல்கலைக்கழகம் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குட்பட்ட கல்லூரிகளில் நடைபெறும் செயல்களை மதிப்பீட்டு, பல்வேறு துறைகளில் குறைகள் காணப்படின் அவற்றை நீக்கி முறைப்படுத்துவது போல அரசும், அறநிலையங்களின் பணிகள் பிழைபடும்போது நெறிநிறுத்தக் கடமைப்பட்டதே. 'ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே' என்ற புறநானூற்றுப் பாடல் 'நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே' என இதனை அறிவுறுத்துகிறது. திருமூல நாயனாரும்,

" தத்தம் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமுஞ்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வதவ் வேந்தன் கடனே "

என்று அரசனுக்கு உரிய கடமையினை அழுத்தந்திருத்தமாக எடுத்துரைக்கிறார். மேலும், தங்கள்உடைமைகளை இதுபோன்ற அறநிறுவனங்களுக்கு வழங்கியவர்களின் நோக்கமும் எவ்வாறானது என்பதனை நினைத்தல் வேண்டும்.

சமுதாயத்திற்கு நலம் செய்யவேண்டிய கடமையும் பொறுப்பும் அறநிறுவனங்களுக்குப் உண்டு. ஆன்மீகப்பணியே அறநிலையத்தின் குறிக்கோள். எஞ்சியவற்றைப் பிறவகைகளில் செலவிடல் வேண்டத்தக்கதே. உலகத்தில் உடல் மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஞானாசாரியர்கள் உயிர்மருத்துவர்கள். சமுதாயத்தில் பரவியுள்ள அறியாமை நோயைப் போக்கி, அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்ப்பவர்களே உயிர் மருத்துவர்களாகிய ஞானாசாரியர்கள்.

## ஆசாரக்கோவை :

இவ்வகை முயற்சிக்கு ஊன்றுகோலாகவே இன்று சங்க இலக்கியத்தில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய 'ஆசாரக்கோவை' என்ற அரிய நூலை விழாமலராக வெளியிட்டுள்ளோம். நூறுபாடல்களைக்கொண்ட இவ்வரிய நூல் பெருவாயின் முள்ளியார் என்ற சங்கப்புலவரால் பாடப்பெற்றது.

ஆசாரம் என்பது அன்றாடம் மக்கள் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கு முறைகளைக் குறிக்கிறது. பல்வேறு அரிய நடை முறைகளை எளிமையாக விளக்கும் இந்நூலை அனைவரும் படித்து உள்ளம் வளர்ச்சிபெறவேண்டும்.

காலையில் எழுந்து செய்யத்தக்க கடமைகள் என்ன? நீராடுவது எவ்வாறு? உணவு கொள்வது எங்ஙனம்? உறங்கும் போது மேற்கொள்ள வேண்டுவது யாது? இல்லறத்தின் இயல்பென்ன? எங்கெங்கே எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? மாணாக்கர் முதலியோர் கடமை என்ன? கணவன் மனைவியர் செய்யத்தக்கன யாவை? என்பனபோன்ற அரிய செய்திகளை இந்நூல் விளக்குகிறது. ஒழுக்கமே உயிர் என்பர் திருவள்ளுவர். ஒழுக்கநெறியினை என்றும் கடைப்பிடிப்பார்க்கு வரும் சிறப்பினை ஒரு பாடல் தொகுத்துத்தருகிறது.

"பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்"

நல்ல குடிப்பிறப்பு வாய்த்தல்; நீண்ட வாழ்நாள்; செல்வம்; அழகு; நிலத்தை உடைமையாகப் பெற்று மகிழ்தல்; மேலான புகழ்; கல்வி; நோயற்றவாழ்வு என்ற எட்டுவிதச் சிறப்புக்களையும் ஒழுக்கம் வழங்குகின்றது என்கிறது இவ்வழகிய பாடல்.

**வாழ்த்து :**

இவ்வாறு ஆசாரக்கோவை கூறும் சிறந்த செய்திகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். எவ்வளவு சிறந்த செயலாயினும் நேரமும் இடமும் அறிந்து செய்யாக்கால் பிழை பட்டுப் போகும்.

"நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை"

என்பது வள்ளுவர் வழங்கும் அறிவுரை. எனவே, இவ்வளவில் நிறைவு செய்கிறோம். அன்பர்கள் இவ்வாறான நூல்களைக்கற்று மனமாசு நீங்கி, சுகவாழ்வு தழைத்து நலம்பல பெற்று நீடுவாழச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

# சமய ஆட்சியும் நாட்டாட்சியும்

"நமது தமிழகத்தில் உள்ள இந்து சமய அற நிறுவனங்களின் நிர்வாகத்திற்கு என ஒரு தனிச் சட்டமும் அதற்காக ஒரு இலாகாவும் செயல்பட்டுவருகிறதென்பதைப் பலரும் அறிவர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே இதுபோன்றதொரு சட்டம் இயங்கிவருகிறது. நாளாக நாளாக இச்சட்டத்தில் பல திருத்தங்கள் இயற்றப்பட்டு முன்பு ஒரு வாரியமாக இருந்ததை இப்போது அரசின் ஆட்சிப் பிரிவுகளில் ஒரு தனித்துறையாக ஆக்கி, அதற்கு முறையாக ஆணையர், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் போன்ற பல அதிகாரிகளை நியமித்து இந்த அற நிறுவனங்களைக் கண்காணித்துவருகிறது நமது தமிழக அரசு. அண்மையில் சென்ற நவம்பர் மாதத்தில் கூடிய தமிழக சட்டசபைக் கூட்டத்தில் இச்சட்டத்தில் சில மாற்றங்களை–திருத்தங்களை ஒருசட்டத்தின் மூலமாகச் செய்திருக்கிறது. பொதுவாகத் தமிழகத்தில் உள்ள கல்வி நிலையங்கள், சத்திரங்கள், சாவடிகள் போன்ற எல்லா வகையான நிறுவனங்களுக்குள்ள அறநிதி ஏற்பாடுகளைக் கட்டுப்படுத்தும்வகையிலும், ஆலயங்கள் அவற்றைச்சார்ந்த அறக் கட்டளைகளை மேற்பார்வையிடவும் நிர்வகிக்கவும், நிர்வாக அதிகாரிகளுக்கு இவ்வற நிலைய நிர்வாகத்தில் பெரும்பகுதியான ஆட்சி அதிகாரத்தைக் கொடுக்கவும், பரம்பரை அறங்காவலர் உள்ள நிறுவனங்களுக்கு மற்றையோர்களை அதிகப்படியான அறங்காவலர்களாக நியமிக்கவும் இன்னும் இவைபோன்ற பல அடிப்படை மாறுதல்களைச் செய்யவும் வகை செய்யக்கூடியதாக அமைந்துள்ளன இத்திருத்தங்கள்.

இப்போது இச்சட்டம் நமது பாரத ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெறவேண்டிய நிலையில் உள்ளது. அது நிறைவேறிவிட்டால் இது நடப்புக்குவந்துவிடும். ஆகவே இச்சட்டத் திருத்தம் எவ்விதம் நமது அற நிறுவனங்களின் நிர்வாகத்தைப் பாதிப்பதாக உள்ளது என்பது குறித்துத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஒரு நினைவுக் குறிப்பினை நமது ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பியருளியுள்ளார்கள். இந்த நினைவுக்குறிப்பில் நமது நாட்டாட்சியில், நமது அறநிறுவனங்கள்– அதாவது ஆலயங்களும் மடங்களும் எவ்வெவ்விதத்தில் உதவியாகச் சேவை செய்து வருகின்றன; ஆட்சியாளர்க்கு உறுதுணையாக விளம்பரமேதுமின்றி மௌனமாகப் பணியாற்றிவருகின்றன என்பவைகுறித்துச் சிலகருத்துக்களை அருளிச்செய்திருக்கிறார்கள். அது பொதுமக்களுக்கும் பயன்படும் என்ற கருத்தில்

அந்தப் பகுதிகளையும், இதேகருத்தை நமது நாட்டுப் பெருந் தலைவர்களாக உள்ள வினோபாஜி, ஜனாதிபதி, பாரதப் பிரதமர் முதலியோர் வெளியிட்டிருப்பதையும் இந்த நேரத்தில் இங்கு எடுத்துக் கொடுப்பது பயன்படக்கூடும் என்றும் கருதுகிறோம்.)

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அருளிச் செய்திருப்பது :-

## தருமை ஆதீனத் திருமடத்தின் கொள்கை :-

உலகில் உள்ள எல்லா மக்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், உலகில் உள்ள மக்கள் எல்லோரும் ஓர் இனம், ஓர் குலம் என்ற ஒருமைப்பாட்டை நமது ஆதீனத்தைச் சேர்ந்த எல்லா நிறுவனங்களும் பிரசாரம் செய்து வருகின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன்னமேயே இக்கருத்தை நமது நாட்டுப் பெரும் புலவர்கள் இயற்றிய பல பாடல்களில் வலியுறுத்தி வந்துள்ளார்கள். கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்கள் இயற்றிய துதிப் பாடல்களில் உலகம் வாழவேண்டும் என்பதையே மைய்க்கருத்தாகக் கூறியுள்ளார்கள். அவர்களால் வலியுறுத்தப்பட்ட இச்சிறந்த கருத்தை - அதே பக்தி ஞானச் சுடரை - அதில் சொல்லப்பட்ட உட்கருவை மேன்மேலும் நமது சமய நிறுவனங்கள் மாறாது வளர்த்துக்கொண்டேவருகின்றன, பெருப்புலவர் நக்கீரர் இயற்றியுள்ள பாடலில் (திருமுருகாற்றுப்படை) இந்த உலக ஒருமையைத் தொடக்கத்திலேயே அழகாக அடியிற்கண்ட வரிகளில் அமைத்துள்ளார்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு"

என்பது அப்பாடற்பகுதி.

யஜுர் வேதமும் இதே கருத்தை அடியிற்கண்டபடி வலியுறுத்தி உள்ளது. "உலகில் உள்ள எல்லா உயிர்களும் என்னைத் தன் நண்பனாகப் பாவிக்கட்டும்; நானும் அவ்வுயிர்களை என் நண்பர்களாகப் பாவிப்பேன்; நாமெல்லாம் ஒருவரை ஒருவர் நண்பர்களாகவே காண்போமாக."

மதவழிபாடுகள், கிரியைகள் முதலியன சிறப்பாக நமது நூல்களில்வகுக்கப்பட்டிருப்பதற்குவழுவில்லாமல் நடைபெறவேண்டுமென்பதில் ஊக்கமளிப்பதோடு, நமது ஞானிகளும், இந்த ஆதீனத்தை நிறுவிய ஸ்ரீலஸ்ரீகுருஞானசம்பந்தரும் அவர்கள் வழியில் இந்த பீடத்தை அலங்கரித்தவர்களுமாக உள்ள ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களும் இயற்றிய நமது ஞானக்கருவூலங்களாக



உள்ள அருள் நூல்களைப் பேணிக் காத்தும், அவற்றை வெளியிட்டும், அவற்றில் ஈடுபட்டு ஆராய்ந்து, அவற்றில் அமைந்துள்ள நல்ல பல கருத்துக்களை வெளியிட உதவும் புலவர்களைப் பாராட்டியும் சிறப்புக்கள் செய்தும், அந்த ஆய்வுரைகளை அச்சிட்டு மக்களுக்கு வழங்கியும் தொண்டாற்றிவருகிறது நமது தருமையாதீனம்.

நமது சமயப் பிரசாரத்துக்கென நல்ல பல பிரசாரகர்களைப் பயிற்றுவித்து அதற்கென ஒரு திட்ட அமைப்பாக ஏற்பாடு செய்து அவர்களின் மூலமாகச் சிறந்த சமயப் பிரசாரம் செய்து வருகிறது. ஆகவே மக்களுள் பிரிவினை ஏற்படுவதைப் பல்லாற்றாலும் தடுத்து ஒருமைப்பாட்டினை வளர்த்துவரப்பாடுபடுகிறது. இறைவன் எங்கும் நிறைந்தவன்; எல்லாம்வல்லவன் என்றகருத்தை மக்கள் மனங்கொள்ளும்படி எடுத்துரைத்து வருகிறது. நம்மிலும் மேலான இறைவன் ஒருவன் உள்ளான்; அவன் நம்மைக்காத்து எல்லா நலன்களும் தந்தருளக் காத்திருக்கிறான் என்ற உண்மையை எடுத்து மொழிந்துவருகிறது.

நமது ஆதீனமும், இவ்வாதீனத்தின் சிஷ்யமடமாக உள்ளதும் இந்த நாடு முழுவதிலும் மேலேகண்ட சிறந்த கருத்துக்களைப் பிரசாரம் செய்து வருகின்றன.

இவ்வாதீனத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சமயக்கொள்கை மிகவும் தொன்மையானது. அதுவே சைவ சித்தாந்தம் என்று வழங்கப்படுவது. அதில் கூறப்பட்டிருக்கும் சிறந்த கருத்துக்கள் இந்த நவீனகாலக் கருத்துக்களுக்கும் ஏற்புடையனவாக - பொருத்தமுடையனவாக உள்ளன.

## சமய வாழ்வும் - ஆட்சிச் சட்டங்களும் - ஒழுங்கு முறைகளும் :

மக்களைக் குற்றங்கள் புரியாது காப்பது அரசின் தலையாய கடமையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. குற்றங்கள் இழைக்கப்பட்டபின்னரே அரசு நடவடிக்கைகள் எடுத்து நீதிமன்றங்கள் மூலமாகத்தண்டனைகள்வழங்கிக் குற்றங்கள் இழைப்பதைத் தடைசெய்துவருகிறது. இந்தக்குறிப்பிட்டபணிக்காக தனதுவருவாயில் பெரும்பகுதியை அரசு செய்துவருவதோடு இதற்காக ஒருபெரிய அமைப்பையே உண்டாக்கி வைத்துள்ளது. இந்த இன்றியமையாப்பணியை நமது மடங்களும் சமய நிறுவனங்களும் அரசுக்கு உதவியாக அவர்கள் வழியில் - சமய வழியில் ஆற்றி உதவி நிற்கின்றன. மக்கள் குற்றங்கள் (பாவங்கள்) புரியாது நற்கருமங்களைச் செய்யும்படி அறிவுரைகளின் மூலமாக எடுத்துரைத்து

அன்பால் நமது நாட்டுக்குடிமக்களை நற்குண நற்செயல்கள் உடையவர்களாக உருவாக்கிக் கொடுக்கிறது. இம்மாபெரும் பணியை வெளியில் சொல்லிக்கொள்ளாமல், மௌனமாக விளம்பரமேதுமின்றி ஆற்றுகின்றன இந்த அறநிறுவனங்கள்.

## நமது செயலும் ( கர்மா ) அதன் பயனும் :

நாம் செய்து வரும் செயல்கள் நல்லனவா அல்லனவா என்பதை இறைவன் அறிவான். நாம் புரியும் நற்செயல் அல்லது குற்றம் இறைவன் ஆணையில் இயங்கிவரும் ஒரு நுண்ணிய அமைப்பின் மூலமாகப் பதிவு செய்யப்படுகின்றன. அதுவும் அப்போதைக்கப்போதே பதிவு செய்யக்கூடியதாக உள்ள அமைப்பு. நாம் செய்யும் புண்ணியச் செயல்கள் வரவாகவும், பாபச் செயல்கள் கழிவாகவும் பதிவாக்கப்படுகின்றன. நாம் அனுபவிக்கும் இன்பங்களும், சலுகைகளும் கூட இக்கணிப்பில் கழிவினத்தில் சேர்க்கப்படுவனவாகும். அதேபோல நாம் செய்யும் பாவச்செயல்களும் வரவினத்தில் கழிவாகக் கொள்ளப்படுவனவாகும்.

இறைவன் அமைப்பில் உள்ள கணக்கு உயிர்கள் செய்து வரும் பாவ புண்ணியங்களுக்கு ஒருவரம்பை அமைத்துக்கொண்டிருக்கிறது. அவற்றின் விளைவாக உள்ள அனுபவங்களும் உடனுக்குடன் கணக்கிடப்பட்டதாக இருக்கும். ஆகவே இவர்கள் செய்துவரும் பாவ புண்ணியத்தின் பயனாக விளையும் அனுபவங்கள் உடனுக்குடன் கணக்கிடப்பட்டு அததற்கு ஏற்றபடி கணக்கில் நேர் செய்யப்படுவதாகவும் உள்ளது. ஆனால் நாம் செய்யும் கருமங்களுக்கு ஏற்ற வகையில் விளையும் அனுபவங்களை அந்தந்தப் பிறவிகளில் உடனுக்குடன் அளிக்கப்படுவதாக இல்லாமலிருக்கலாம். இதன் காரணமாக இறைவன் ஒருவன் உள்ளான்; அவன் நம்மைக்கண்காணித்து வருகிறான்; நாம் செய்யும் வினைக்கீடான பயனை ஒரு உன்னதமான கணக்கீட்டு முறையின் கீழ் அளிப்பான் என்ற உண்மையை நாம் உணரக்கூடியதாக இல்லாமலும் இருக்கலாம்.

நம்முடைய புண்ணியச்செயல்கள் நாம் செய்திருக்கும் பாவச் செயல்களைவிட அதிகமாக இருந்தால் அதற்கான அனுபவமாக நமக்கு இப்பிறவியில் உயர்பதவிகளும், நல் வாழ்வுகளும் சுக போகங்களும் கிட்டும். அதேபோல பாவம் மிகுதிப்பட்டால் இழி பிறப்பும் உடற்றுன்பமும் மனத்துன்பங்களும் மிகுதியாகி அல்லற்பட்டு உழலநேரும். இவ்விதமாக இறைவன் நமக்குக்கொடுக்கும்



அனுபவங்கள் நம்மைத் தூய்மை செய்து என்றும் வற்றா முற்றா இன்பத்தை – திருவடிப்பேரின்பத்தை நமக்கு அளிக்க வேண்டுமென்ற பெருங்கருணையினால்தான் ஏற்படுகின்றன.

நமது சமயாசாரியர்களில் ஒருவராகிய அப்பர் சுவாமிகள் அருளிச்செய்திருக்கும் திருமுறைப்பாடல்களில் நமக்கு வழங்கியுள்ள அறிவுரையை நாம் சிந்திக்கக்கடமைப்பட்டுள்ளோம்.

> " தொழுது தூமலர் தூவித்துதித்து நின்று
> அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்
> பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
> எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே " — அப்பர்.

இவ்விதமாக நமது ஆசாரியப் பெருமக்கள் நமக்கு முன்னறிவிப்புச் செய்தும், அவ்வப்பொழுதும் அறிவுரைகள் வழங்கியும் நம்முடைய பண்பைத்திருத்தி நம்மை நல்லவர்களாக உருவாக்கியும், நற்செயல்கள் - புண்ணியங்கள் செய்யும்படித் தூண்டியும், நம்முடைய அன்றாடவாழ்க்கையைச்செம்மைப்படுத்தி நலம்வழங்குகிறார்கள். நம்முடைய எண்ணங்கள், செயல்களைத் தூய்மைப் படுத்தவே இவ்வருஞ்செயல்களை அவர்கள் நம்மீது உள்ள கருணையின் காரணமாக ஆற்றி வருகிறார்கள்.

*　　*　　*　　*

## வினோபாஜி :

ஓராண்டுக்காலம் மௌன விரதம் இருந்து அதன் முடிவில் பவுனார் என்னுமிடத்தில் வினோபாஜி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் :–

" அனுஷாசன் ( கட்டுப்பாடு ) என்பது குறித்து ஒரு சில வார்த்தைகள் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன். மகாபாரதத்திலிருந்து " அனுஷாசன் " என்றசொல் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் மகாபாரதத்துக்கு முன்பு இந்தச் சொல் தைத்ரீயஉபநிஷதத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பண்டைய நாட்களில் ஆசாரியர்களை அடுத்து பன்னிராண்டு பயில்வதற்குச் செல்வது பழக்கத்தில் இருந்தது. இராமர் வசிஷ்டரிடமும் கிருஷ்ணன் சாந்தீபினியிடமும் குருகுலவாசம்செய்தனர். இதற்கு முன்னதாகவே கிருஷ்ணன் கம்சன் முதலியோரை வதம் செய்து புகழடைந்திருந்தபோதிலும் சாந்தீபினியிடம் செல்வதுதான் பொருந்தும் என்று ஏற்றுச் சென்றான். இவ்விதமாக இருந்தது நமது பழக்கம்.

ஆஸ்ரமத்தில் பன்னிராண்டு தங்கி பிரமசரியத்தைக் கைக்கொண்டு பயின்றுர்கள். இந்தப் பயிற்சியின் முடிவில் கிருகஸ்தாஸ்ரமத்துக்குச் செல்ல விரும்பியவர்கள் அவர்கள் வழியிலும், பிரமசரியத்தையே மேலும் கைக்கொள்ள விரும்பியவர்கள் தம் குருவினிடமுமே தங்குவதும் பழக்கம். பிற்கால வாழ்க்கையை அவர்கள் எவ்விதம் மேற்கொள்ளவேண்டுமென்பதை ஆசாரியர்கள் அவர்களுக்கு எடுத்துரைப்பார்கள். சத்தியத்தையேபேசு; தரும மார்க்கத்தை (சமயத்தை)ப் பின்பற்று என்பன போன்றதே அவர்கள் காட்டும் வழி. அவைகள் மிகவும் சிறந்த கட்டளைகளாக இருக்கும். அவை குறித்து இப்போது விளக்கிக் கொண்டிருப்பது தேவையில்லை. உபநிஷத் முடிவில் சொல்வது இது தான், " கட்டுப்பாடு. " இதனை " உன் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். "

ஆகையால் ஆசாரியர்கள் ஒழுங்குக்கட்டுப்பாடுடையவர்களாகவும், அரசு அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆட்சியை உடையவர்களாகவும் இருந்தனர். இந்த ஒழுங்குக்கட்டுப்பாடுகளுக்கும் அரசுக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கமாகப் புரிந்து கொள்ளவேண்டியதாகும். அதனைச் சுருக்கமாக விளக்குவேன். அரசியல் கட்டுப்பாடுகளை மட்டுமே அது குறிப்பதானல் அதன் படிக்கு வாழ்க்கையில் அமைதியும் மனநிறைவும் ஒருபோதும் இராது. பங்காளதேஷை எடுத்துக்கொள்வோம். பங்காளதேஷ் விவகாரம் தீர்ந்துவிட்டதென்று அறிவிக்கப்பட்டது. ஆறுமாதங்களுக்குப்பிறகு விவகாரங்கள் மீண்டும் ஒருமுறை தலைதூக்கி விட்டன. அந்த விவகாரம் தீர்க்கப்பட்டதாகவும் தீர்க்கப்படாததாகவுமே இருந்தது. இஸ்ரேல் விவகாரமும் தீர்க்கப்பட்டது. மீண்டும் கடுமையானதாகியிருந்தது. இந்தியாவில் முன்பு நீங்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருந்த வேடிக்கைகள் வெளிகளில் எங்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எங்கும் அரசாங்கத்தோடு மக்கள் சேர்ந்துகொண்டு அதன் கட்டுப்பாட்டை கடைப்பிடித்தார்கள். என்ன நேர்ந்திருக்கிறது? ஒன்றில் பிரதமமந்திரி கொல்லப்பட்டார். மற்றதில் தேசத்தலைவர் கொலைசெய்யப்பட்டார். ஒவ்வொரு நாளும் நீங்கள் இதுபோன்ற செய்திகளை நாளிதழ்களில் படித்து வருகிறீர்கள்.

ஆசாரியர்கள் விதித்த கட்டுப்பாடுகளைப் பின்பற்றினல் மக்கள் அமைதியாக வாழலாம். இந்த ஆசாரியர்கள் என்பவர் எவர்? குருநானக்கின் சொல்படி – " அவர்கள் அஞ்சாமை உடையவர்கள். பட்சபாதமற்றவர்கள் ( நடுநிலைமை உடையவர்கள். ) அவர்களுக்கு பகைவர்கள் எவருமில்லை. அவர்கள் அலை-



வுடையவர்களாகவோ சலிப்புடையவர்களாகவோ இருக்கமாட்டார்கள். யாரையேனும் ஒரு வலுக்கட்டாயத்துக்குட்படுத்துவதற்காக உபவாசம் இருக்கமாட்டார்கள். ஒவ்வொரு பிரச்சினை குறித்தும் அமைதியாகச் சிந்திப்பார்கள். பொதுமக்களின் ஒப்பு தலைப்பெறவும் விரும்புவார்கள். அதாவது மக்களுக்கு ஏற்புடையதாக உள்ளதைச் சிந்திப்பர். மக்கள் அவர்கள் வழியைப் பின்பற்றினல் வாழ்வில் இன்பம் அடைவர். உலகத்தில் அமைதி நிலவும். உலகத்தைச் சற்றுமறந்து இந்தியாவைப்பற்றிச் சிந்திப்போம். இந்தியா ஒரு மாபெரும் தேசம். 15 மொழிகள் கொண்டது. ஆசாரியர்கள் கூறிய விதிமுறைக்கட்டுப்பாடுகளை அறிந்து அவைகளைப் பின்பற்றினல் மக்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வர் என்று நான் நம்புகிறேன். ஆசாரியர்கள் கூறியுள்ள வழிகளுக்குமாருக அரசு சென்றுல் அதனை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்வது குறித்துச் சிந்திக்கவேண்டியதாகும். ஆசாரியர்கள் கூறியுள்ள கட்டுப்பாடுகளுக்கு மாருக அரசு செல்லாது என்ற முழுநம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே இந்தியாவில் சத்தியாக்கிரகம் செய்யவேண்டிய அவசியமுமில்லை. " ஒழுங்குக் கட்டுப்பாட்டுச் சகாப்தம் " என்று நான் சொல்வதன் பொருள் இதுதான்.

ஆதாரம் :– சண்டே ஸ்டேண்டர்டு (Sunday Standard) 4—1—76

இதேநேரத்தில் நமது பாரத ஜனதிபதி பெருமதிப்பிற்குரிய பக்ருதீன் அலி அகமதவர்கள் :– ஆரிய சமாஜத்தின் நூற்றுண்டு விழாக் கூட்டத்தில் பேசும்போது கூறியதன் சாரம்.

" மதங்கள் தாம் கொந்தளிப்பை ஏற்படுத்துகின்றன என்பது தவறு வறுமையும் வேலையின்மையும் ஒழிந்தால் கொந்தளிப்பு இருக்காது. ......... பிற மதங்களை அழிக்க வேண்டும் என்று எந்த மதமும் போதிக்கவில்லை. சகிப்புத் தன்மை, சக வாழ்வு ஆகியவற்றைத்தான் எல்லா மதங்களும் வலியுறுத்துகின்றன......"

இதே கருத்துக்களை நமது பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி அவர்களும், பாதுகாப்பு மந்திரி திரு. ஒய். பி. சவான் அவர்களும் வெவ்வேறு இடங்களில் வலியுறுத்தியுள்ளார்கள் என்பதாகப் பத்திரிக்கையில் செய்திகள் வருகின்றன.

## ருஷியாவில் மத நம்பிக்கை :

('ருஷியாவில் தமிழ் மாணவி' என்ற நூலிலிருந்து சில பகுதிகள் - ஆசிரியை :- வி. எஸ். கமலா )

ருஷ்ய நாட்டில் அனைவருமே கடவுள் நம்பிக்கையற்றவர்கள் என்று கூறிவிட முடியாது. அந்தநாட்டு அரசியல் சட்டப்படி, மத

நம்பிக்கை அற்றவர்கள் ஆஸ்திகர்களை அவமதிப்பதோ, மனம் நோகும்படி நடந்துகொள்வதோ குற்றமாகும். ஆனால் தம் கருத்துக்களை எடுத்துக்கூற அனைவருக்கும் உரிமை உண்டு. அதேபோன்று, ஆஸ்திகர்களும் நாஸ்திகர்களைப் பழித்துக்கூற அனுமதிக்கப்படுவதில்லை.

மாஸ்கோவில் உள்ள ஒரு தேவாலயத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலானோர் வயதானவர்களே. நான்சென்றிருந்த அன்று, பாதிரியார் ஏதோவிசேஷ உரை நிகழ்த்திக்கொண்டிருந்தார். அவரது பேச்சில் பல உரைகள் 'ஆதி ஸ்லானிக்' மொழியிலிருந்து பயன்படுத்தப் பட்டதால், புரிந்துகொள்வது எனக்குச் சற்று கஷ்டமாக இருந்தது. அந்த ஆலயத்திலிருந்து வெளியேவந்த பின்பு சிலருடன் பேசிப்பார்க்க வேண்டுமென்று எண்ணினேன். நடுத்தரவயதுடைய ஒரு அம்மையாரை அணுகி, "உங்களுக்கு உண்மையிலேயே கடவுள் நம்பிக்கை உண்டா?" என்று கேட்டேன். "நம்பிக்கை எனக்கு இருக்கிறதா, இல்லையா என்பது எனக்கே தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் சென்ற யுத்தத்தில் என் கணவனை நான் இழந்தபின் இங்கு வருவதால் எனக்கு ஒரு மன ஆறுதல் கிடைக்கிறது" என்றார் அவர்.

உஸ்பெக்கிஸ்தான் என்ற மத்திய ஆசியக் குடியரசுக்குச் சென்றிருந்தேன். அங்கு முஸ்லீம் இனத்தவரே அதிகம். அங்கு ஒரு மசூதிக்குச்சென்றிருந்தேன். மசூதியிலும் அநேகமாக அனைவரும் முதியவர்களாகவே இருக்கிறார்கள். ஒரு பெரியவரைச் சந்தித்து அவரது மதநம்பிக்கைபற்றி விசாரித்தேன். அவர் பதிலளித்தார், "என் மகன் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினனாக இருக்கிறான். அவன் மசூதிக்குத் தொழுகைக்கு வருவதில்லை. நம்மைவிட அதீத சக்தி ஒன்றின்மீது மனிதன் நம்பிக்கை வைத்தால் அவன் பாவங்கள் செய்வதற்கு அஞ்சுவான் என்றே நான் கருதுகிறேன்" என்றார்.

"அப்படியானால், மதநம்பிக்கையற்ற உங்கள் மகன் பாவம் செய்ய அஞ்சமாட்டான் என்று நீங்கள் கருதுகிறீர்களா?" என்று கேட்டேன்.

"அப்படியில்லை; உண்மையில் என் மகன் மிகவும் நல்லவன். அவன் மக்களின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறான். மக்களுக்கு நன்மை செய்வதே அவனது குறிக்கோள். இறுதியாகப் பார்க்கப் போனால் அவன் மனப்பூர்வமாகக் கருதினாலும் கருதாவிட்டாலும் அவனும் என்னைப்போன்ற ஒருபக்தன் என்றுதான் நான் நினைக்கிறேன்" என்றார்.

(ஆதாரம் :- "மஞ்சரி" - நவம்பர் 1975)

# ஆசாரக்கோவை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

(மலர் 35. இதழ் 1, பக்கம் 24 இன் தொடர்ச்சி)

## நாட்கடமைகள் :

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம் என்பது விதி. என்றாலும், அட்டமி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தசி, முதலிய நாட்களிலும், அரசனுக்குத் தீங்கு நேரும் நாட்களிலும், பூகம்பம் இடிமுழக்கம் தூய்மையின்மை முதலியன நேரும் நாட்களிலும், நாம் நூல்களை ஓதுதல் கூடாது.

திருமண நாள், கடவுளர் திருவிழா நாள், பிதிர்களுக்கு வழிபாடு செய்யும் நாள், வேள்விகள் செய்யும் நாள் ஆகிய இவ் ஐந்திலும், பலவகை அறங்களைச்செய்தலும், விருந்தினர்களுக்கும், ஏழைகளுக்கும் உணவு அளித்தலும் நலம் பயக்கும்.

## செய்யத்தகாதன :

அறிவுடையவர்கள், யாரையும் பழித்துரைக்க மாட்டார்கள். இகழ்ந்து ஏளனமாகப் பேசமாட்டார்கள்; பலர் நடுவில் உறங்க மாட்டார்கள். தம்மால் இயலாதவற்றைத் தருவதாகவோ, செய்வதாகவோ, சொல்லிப் பின்னர் ஏமாற்றமாட்டார்கள். ஏழைகளை மனம் நோகும்படி இழித்துக் கூறமாட்டார்கள். வஞ்சனைச்சொற்கள், நயமில்லாத சொற்கள், வாய்க்கு வரும் சொற்கள், பிறரைப் பழிக்கும் சொற்கள், புறங்கூறும் சொற்கள் ஆகியவற்றை, ஒழுக்கமுடையவர்கள் ஒருபோதும் கூறமாட்டார்கள்.

நமது உடல்நலத்தைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்ள விரும்புபவர்கள், மின்னலின் ஒளியையும், விண்மீனின் வீழ்ச்சியையும், விலைமகளிரின் ஒப்பனையையும், காலை மாலைகளின் வெயிலையும், உற்று நோக்கமாட்டார்கள்.

ஒருபொருளை வீசி எறிதல், கல்லால் எறிதல், வெறுக்கத் தக்க முற்கு வீளை முதலிய ஒலிகளைச் செய்தல், பிறரைக் கைதட்டிக் கூவி அழைத்தல், பிறரைப்போலநடித்து நையாண்டி (விகிர்தம்) செய்தல், பிறர்பால் சினந்து சிடுசிடுத்தல், ஒளித்துச் செய்தல் முதலியவற்றைப் பண்பாடுடையவர்கள் செய்தல்கூடாது.

போர் நிகழும் இடம், கள்குடிக்கும் இடம், விலைமகளிர் வாழும் இடம், நண்பர்கள் கொள்கையும் பண்பும் இழக்குமிடம், பலதிற மக்கள் கூடும் தண்ணீர்த்துறை போன்ற இடங்களில் அறிவுடையவர்கள் நெடுநேரம் நிற்க மாட்டார்கள்.

தம் உடலுக்கு நோயின்மையை விரும்புபவர்கள், பாழான வீடு, பழுதடைந்த கோயில், சுடுகாடு, ஊருக்குப் புறம்பே தனித்துள்ள முதுமரம் என்பவற்றின்பால் துணையுடன் அன்றித் தனியே செல்லமாட்டார்கள். பகலில் உறக்கம் கொள்ள மாட்டார்கள்.

ஒருவர் புறப்பட்டுச் செல்லும்போது பின்னே நின்று கூவி அழைத்தல், தும்முதல், எங்கே செல்கின்றீர் என வினவுதல், ஒருவருக்கு நேர் எதிரே சென்று மிக நெருங்கிப் பேசுதல், முதலியன செய்தல் கூடாது.

பெரியவர்களின் பக்கத்திற் சற்று விலகியிருந்து பணிவு தோன்றப் பேசுதல், பெரியவர்களைப் பணிந்து வலம் செய்து செல்லுதல் முதலியன, பண்பாடு உடையவர்களின் செயலாகும்.

ஒருவர் உடம்பைப் பார்த்து நன்றாய் இருக்கிறதென்று (அல்லது உடல் நன்றாக இல்லையே என்று) சொல்லுதலும், விளக்கின் அருகில் சென்று வாயால் ஊதி அணைத்தலும், சமையலறையிலுள்ள 'அடுப்பின்கண் நெருப்பு அவிந்து போகும்படி எடுத்தலும், உடம்பிற் படும் வகையில் நெருப்பிற்கு மிக நெருங்கி இருந்து குளிர்காய்தலும் கூடாது.

தம்மைவிடப் பெரியவர்களுடன் செல்லும்போது, தாம்மட்டும் வாகனம் ஏறிச் செல்லுதலும், காலில் செருப்பணிந்து குடை பிடித்துச் செல்லுதலும் முறையன்று.

தாய், புதல்வி, சகோதரி முதலிய உறவு உரிமை உடையவர்களாயினும், பெண்கள் இருக்குமிடத்தில் கூடியவரையில் ஒருவன் தனித்துச் சென்று பழகாமல் இருப்பது நல்லது.



அரசன் அல்லது தலைவன் செய்யும் செயல்களில் வெறுப்புக் காட்டிக் கொள்ளுதல், அவரொடு கருத்து வேறுபட்டுக் கலகம் செய்தல், சிறிது ஒதுங்கி மதிப்பாக நில்லாமல் அவர்கள் முகத்திற்கு எதிரே நிற்றல்; அரசன் தனியே இருக்கும்போது தம்முடைய செயல்களையும் செய்திகளையுமே பேசிக் கொண்டிருத்தல் முதலியன குற்றங்களாகும். அரசன், 'காக்கை வெண்ணிறமுடையது' என்றாலும், அன்று என்று மறுத்துக் கூறாமல், ஆம்! ஆம்! என்று உடன்பட்டு நிற்றல், ஒருவகையில் நலம் பயப்பதேயாகும்.

அரசர் முதலியவர்கள் முன்னிலையில் எச்சில் உமிழ்தல், உயர்ந்த இடத்தில் ஏறியிருத்தல், வெற்றிலை போடுதல், தகுதியற்ற சொற்களைக் கூறுதல், உறக்கம் கொள்ளுதல் முதலியன செய்தலாகாது. அரசரின் முன்னிலையில், தம்முடைய செல்வம் கல்வி புகழ் செயல் திறம் முதலியனபற்றி, மிகுதியாகப் பலமுறை புகழ்ந்து சொல்லிக் கொள்ளுதல் கூடாது. அரசனின் அரண்மனையிலும் தெய்வத் திருக்கோயில்களிலும், பிறர் எவரையும் வணங்குதல் முறையாகாது.

பெரியவர்கள் இருக்கும் இடத்தில் ஆடையைக் களைதல், காலைச்சொரிதல், கைகளை ஆட்டிப் பேசுதல், பெண்களை உற்று நோக்குதல், மறைவான செய்திகளைப் பேசிக்கொள்ளுதல் ஆகியவற்றைச் செய்தல் கூடாது.

நல்ல குலமகளிர் தம்முடைய கணவரின் உருவத்தை அன்றி, மற்றவர்களின் உருவத்தைக் கூர்ந்து உற்று நோக்குதல் கூடாது. தம் உடலின் அமைப்பைப் பலர் முன்னிலையில் பலகால் பார்த்துக் கொள்ளுதல், பலர் நடுவில் தலை மயிரைக் கோதுதல், கைந்நொடித்தல் முதலியன செய்தல் முறையன்று. ஒருவரின் வீட்டிற்குப் புழைக்கடை வழியால் நுழைதல், பிறர் தம்முடைய மனைவியரோடு தனித்து இருக்குமிடத்துப் புகுதல், விலைமகளிர் இருக்குமிடத்தில் தாம் குடியிருப்புக் கொள்ளுதல் முதலியன, தீங்கு பயக்கும் செயல்களாகும்.

பொது வழிகளை அடைத்துக் கொண்டு பக்க வரிசையில் திரளாகச் செல்லுதல், ஒருவருடைய நிழலை மிதித்துக் கொண்டு நிற்றல், பேசுவதற்கு முன்னரே எதனையும் ஆராய்ந்து வைத்துக் கொள்ளாமல் பேசும்போது சிந்தித்துக்கொள்ளலாம் என்று இருத்தல், ஊர்ப் பொதுமக்கள் பலரும் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்தல், அரசனின் படைவலிமை பற்றிய செய்திகளைப் பற்றிப் பகைவர்க்கு உளவு கூறுதல், முதலியன கூடாது.

227132
சென்னை-600 008



ஆசிரியரிடம் மாணவர்கள் மிக்க அன்புடனும், பணிவுடனும் நடந்துகொள்ளுதல் வேண்டும். ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகுதல். மாணவர்களுக்கு இன்றியமையாதபண்பாகும். நல்ல மாணாக்கர்கள், ஆசிரியர் இரு என இருந்தும், சொல் எனச் சொல்லியும், செல்க எனின் சென்றும், அவர் கூறுவனவற்றைச் செவிவாயாகவும் நெஞ்சுகளனாகவும், சித்திரப்பாவை போல் அடங்கிக் கருத்தூன்றி இருந்து கேட்டு, மறவாமல் உள்ளத்தில் பதித்துக்கொள்வர்.

ஒருவரிடத்தில் ஏதேனும் ஒன்றைச் சொல்ல நேர்ந்தால், வேகமாகவும் மிக உரத்தும் பேசுதல் கூடாது. ஒன்றையே பலமுறை திரும்பத் திரும்பப் பேசுதல், தெரிந்த செய்தியையே விரிவாகப் பேசிக் காலத்தைப் போக்கி விளக்குதல், சிறிய செய்தியைப் பெரியதாக மகைப்படுத்துதல் முதலியன கூடாது. சொல்ல வேண்டிய பொருள்களுள் முதன்மையான எதனையும் விடாமலும், வேண்டாத செய்தியை விலக்கியும், காலமும் இடமும் அறிந்து, கேட்பவரின் மனநிலையை உணர்ந்து, சில சொற்களில் தெளிவாகச் சொல்லுதல் நல்லது.

ஒவ்வொரு மனிதனும் எறும்பு, தூக்கணாங்குருவி, காக்கை என்பனவற்றைப் போல, நல்லியல்பும் செயலும் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். அதனால் அவனுக்கு ஆசாரமாகிய ஒழுக்க வாழ்க்கையின் மேம்பாடு ஏற்படும். எறும்பைப் போன்ற சுறுசுறுப்பு மனிதனுக்கு இன்றியமையாதது; தூக்கணாங்குருவி கூடு கட்டுதல் போன்று சிறந்த செயலாண்மைத்திறம் நமக்குத் தேவை; காக்கையைப்போல உறவினரையும் நண்பினரையும் தழுவி விருந்தோம்பும் திறம் நமக்குப் பெருமையைத்தரும்.

முடிவுரை :

இத்தகைய ஆசாரங்கள் பலவற்றைச் சிறந்த இனிய எளிய முறையில், ஆசாரக்கோவை என்னும் நூலில் பெருவாயில் முள்ளியார் என்னும் சங்ககாலப் புலவர், நமக்குப் பயன்தரும் முறையில் நலமுற விளக்கியருளியிருக்கின்றார். நாகரிகமும் பண்பாடும் வாய்ந்த நம் மக்களிடத்திலேயே, இத்தகைய நல் ஒழுக்க முறைகளாகிய ஆசாரங்கள் அமைந்து காணப்படும்.

முன்பின்பழக்கமில்லாத அயல்நாட்டவன், வறுமைமிக்கவன், வயது முதிர்ந்தோன், இளஞ்சிறுவன், பிணிவயப்பட்டவன். பயமுற்றவன், அரச அலுவலில் உள்ளவன், மணமகன்



முதலியவர்களின் திறத்தில், மேற்கூறிவந்த நல்லொழுக்க முறைகளாகிய ஆசாரங்கள் முற்றிலும் வற்புறுத்தப்படமாட்டா. இவைகளில் அவர்களுக்கு ஏற்ற பெற்றி விதிவிலக்கு உண்டு என்றும் குறிப்பிட்டு, ஆசிரியர் இந்நூலை முடிக்கின்றார்.

இந்நூல் ஒருவகையில் உடல் நலக்கோட்பாடுகள் ( Hygeric Princuples ) பற்றிக் கூறுவதாகவும், தனிமனிதனுக்குரிய நல்லொழுக்க முறைகள் (Moral & ethical Codes) பற்றி அறிவுறுத்துவதாகும்; சமுதாயச் சூழலிற் பலரொடு கலந்து பழகும் நெறிமுறைகள் ( Social marners & etigvette ) பற்றி விளக்குவதாகவும், சிறந்த முறையில் அமைந்துள்ளது.

இந்நூல், ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டதேயாயினும், இக்காலத்திற்கும் ஏற்ற புதுமை நலப் உடையதாகப் பொலிகின்றது. இவ்வியல்பே சிறந்த இலக்கியங்களுக்குரிய சீரிய பண்பாகும். இத்தகைய புதுமைப் பொலிவும் படைப்புத் திறனும் மிக்க உயிர்ப்பாற்றலுடைய நூல்கள்தாம் எத்தனைக் காலமாயினும் அழியாது நின்று நிலைபெறும்; நவில்தொறும் நயம்பயக்கும். காலத்தால் வாடிக் கழியாமலும், பன்னலமார் சீலத்தாற் சுவை செறிந்தும், காலத்தான் அறிவூட்டி ஆர்வப்பசி பெருக்கியும் நிற்க வல்ல நூல்களே, திருவள்ளுவர் குறிப்பிட்ட " இலங்கு நூல்கள் " ( Elassics ) ஆகும். ஆதலின் இத்தகைய பழமையும் பெருமையும் வாய்ந்த பயன்மிக்க நல்ல நூல்களை நாம் அனைவரும் நன்கினிது கற்று கற்றபடியே நின்று பொற்புற வாழ முயல்வோமாக !

---

## பார்வையாளர் குறிப்பு

தருமையாதீனம்

**ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம், சீகாழி.**

ஆலந்தூர் நண்பர்களுடன் அனைவரும் இக்கோயிலை நன்முறையில் கண்டு தரிசித்தோம். நல்ல முறையில் பராமரிக்கப் பட்டுவரும் இக்கோயிலை அனைவரும் தரிசிப்பது நலம் பயக்கும். கோயில் நிர்வாகத்தினர்களுக்கு மிகவும் நன்றி.

A. P. Somasundaram,
Assistant Chief Secretarariat,
Madras. 13—12—75.

P. K. சுப்ரமணியன்,
மற்றும் குழுவினர்.

# சிதம்பரம் - குகைமடம்

## —: கண்கட்டி :—

## ஸ்ரீ மறைஞான சம்பந்த நாயனார்

திருமுறைக் கலைஞர்

**வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்**

( மலர் 35, இதழ் 1, பக்கம் 29 இன் தொடர்ச்சி )

**கண்கட்டி மடம் என்ற ஒன்று தனியே அமைத்தல் :**

குகை - கண்கட்டி - மறைஞான சம்பந்தப்பண்டாரம் அவர்கள் குகைமடத்தில் சுமார் 32- ஆண்டுகளுக்குமேல் இருந்து வந்தார் எனக் கருத இடமுண்டு. அவர்கள் பிற்காலத்தில் சிதம்பரத்தில் தமக்கு என்று உரிமையுடைய ஒரு சைவ மடம், இருக்கவேண்டும் என்று கருதினார்கள். உடனே சிதம்பரத்தில் சிவமே நிலவும் திருவீதிகளான கீழைமாட வீதியும், தெற்குமாட வீதியும் கூடும் உமையாள் சந்தின் மேல்பால் வடக்கு நோக்கிய சற்று அகன்று தெற்கு மிக நீண்டு அமைந்த மடம் ஒன்று கட்டினார்கள். அப்போதே அம்மடத்தின் தென் கோடியின் பின்பகுதி இறுதியில் திருவண்ணாமலை ஸ்ரீ அருணசலேசுவரர் நினைவாகக் கருங்கற்களால் தனிக்கோயில்* ஒன்றும் அமைத்து அதில் ஸ்ரீ அருணசலேசுவரர் என்ற திருப்பெயர் உடைய சிவலிங்கம் ஒன்று மட்டும் பிரதிஷ்டை செய்து நாடோறும் வழி பட்டார்கள் எனத் தெரிகிறது.

---

* இத்தனிக்கோயில், இன்றும் சிதம்பரம் - மாலைகட்டித்தெரு வடபாக வரிசையில் மெய்கண்ட வித்தியா சாலைக்குக் கீழ்பால் மண்சுவர் அமைந்த - காலியாக உள்ள தோட்டத்தில் கிழக்கு நோக்கி உள்ளது. இக்கோயில், கண்கட்டி - மறைஞான சம்பந்தப்பண்டாரம் அவர்களின் சீடர் பரம்பரையில் வந்த சிதம்பரம் மாலைகட்டித்தெருவில் இருந்து காலம் சென்ற பேரறிஞர் வாமதேவ முருகப்பட்டாரகர் (சைவாசாரியர்) புதல்வரும்



மறைஞானசம்பந்தர் தம்கண்களைக்கட்டிக்கொண்டு இருந்து வந்ததனால் அவர் தமக்கு உரிய மடமும் கண்கட்டி மடம் எனவும் பெயர் பெறலாயிற்று.

குகை - கண்கட்டி மறைஞானசம்பந்தப் பண்டாரம் அவர்கள் தாம் இருந்த குகை மடத்து நிர்வாகம் முதலியவற்றை அதற்கு உரிமை யுடையவர்பால் ஒப்படைத்து விட்டுச் சிதம்பரம் தெற்கு மாடவீதியில் தாம் அமைத்த புதிய மடாலயத்திற்கு ஒரு நன்னாளில் மிகச் சிறப்புடன் எழுந்தருளிவந்து இருக்கலானார்கள். மடாலயத்திலே பூசை மடத்தில் ஆன்மார்த்த ஸ்ரீ காளத்தீசுவரர் நித்திய பூசையும், பிறகு நித்திய மாகேசுவர பூசையும் நாடோறும் சிறப்பாக நடைபெற்றன. மடாலயத்துள் ஒரு பகுதியில் சமயச் சொற்பொழிவு, சைவ சித்தாந்த பாடம், சைவசமய நூல்கள், பிற இலக்கிய நூல்கள் பாடம் நடைபெறும்என்பர். பல சீடர்கள் அடிக்கடி வந்து தம் குருவைக் காண்டலும் பணிவிடை புரிதலு மாக இருந்து வருவர். கண்கட்டி மடம் செல்வ நிலையில் செழிப் புற்று விளங்கி வந்தது.

குகை - கண்கட்டி மறைஞானசம்பந்தப்பண்டாரம் அவர்கள் தமது மடாலயத்தில் சுமார் 12 ஆண்டுகளுக்குமேல் உலகத்தார் தெய்வமாகப் போற்றச் சகல சிறப்புக்களோடும் செல்வநிலையில் வீற்றிருந்து ஒரு நன்னாளிலே ஸ்ரீ நடராசப் பெருமான் திருவடி நிழலை அடைந்தருளினார்.

குகை - கண்கட்டி மறைஞானசம்பந்தர்† பரிபூரண நிலை அடைந்ததும், அவரது கண்கட்டி மடாலயத்திற்கு அடுத்த உரிமையாளராக - அதிபராகத் திகழ்ந்தவர் சீகாழி மறைஞான தேசிகர் என்பவர் ஆவர். இவர் அதிபரான காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் முடிவு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

---

தமிழாசிரியரும், எனது ஆப்த நண்பருமான திரு. V.M.மாணிக்கப் பட்டாரகர் அவர்களுக்கும் அவரது வமிசத்தைச் சேர்ந்தவர் களுக்கும் உரிமை உடையது என்கின்றனர். இன்றும் அக் கோயிலுக்கு ஒருகாலம் பூசை நடைபெற்று வருகிறது. பிற விஷயங்களை எடுத்துச் சொல்லத்தக்க முதியவர் ஒருவரும் இல்லை.

† இவர்களின் திருமேனி சிதம்பரம் - ஞானப்பிரகாச குளத்தின் தென்கரையிலே மிக அண்மையில் அடக்கம்செய்யப்பெற்றது என்பர். இங்குச் சமீபகாலம் வரை (கி. பி. 1935 வரை) யில் பெரிய ஒரு வில்வமரமும், சிவலிங்கமும் இருந்து வந்ததையும், அவற்றைச்சுற்றி நாகதாளி (சப்பாத்து)ப் புதர் மூடி இருந்ததையும் நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும்போது

சீகாழி மறைஞான தேசிகர் அவர்களுக்குப்பின் வாரிசாக வந்த கண்கட்டி மடத்து அதிபர்களைப்பற்றியசெய்திகள் ஒன்றும் புலப்படவில்லை. சுமார் 100 வருடங்களுக்குமுன் கண்கட்டிமடம் இடிந்த நிலையில் கவனிப்பார் இன்றிக் கிடந்தது என்பர். தற்போது அங்குப் பற்பலர் வீடுகளாக அமைந்து உள்ளது கால நிலை போலும்.

இம்மடத்து ஒன்றன் பின் ஒன்றாக வரும் தலைவர்களின் மரபு கூற இயலாமற் போய் யாவும் அழியக்காரணம், ஆதி தலைவரும் அவருக்குப்பின்வந்த தலைவர்களும் ஆன்மானந்த வாதக் கொள்கையில் நின்று சைவசித்தாந்தக் கொள்கையினைக் கைவிட்டதே ஆகும்.

---

வந்து பார்த்துள்ளேன். இதனைக் கவனித்துக் கண்காணிப்பார் இல்லாத குறையினால் வெட்டவெளியான இடம் தற்போது அவ்விடமும் அதனைச்சார்ந்த பிற இடங்களும் கனகசபைநகர் என்ற பெயருடன் அமைந்து பற்பலர் வீடுகள் நிறைந்துள்ளன.

இச் சமாதியின் அண்மையில் அதாவது ஞானப்பிரகாச குளத்தின் நிருதிமூலையில் சிந்துபூந்துறை ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சமாதி உள்ளது. அதனைத் தருமையாதீனத்தில் கண்காணித்து வருவதனால் இன்றும் அது காட்சி அளிக்கிறது.

சிதம்பரம் - ஞானப்பிரகாசகுளம் - இது யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச முனிவர் என்பவரால் வெட்டப்பெற்றது. இம்முனிவர் யாழ்ப்பாணம் ஸ்ரீ ஆறுமுக நாவலரின் முன்னோர்; இருமொழிகளிலும் வல்லவர்; கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது சிலகாரணங்களால் தமது உயர் உத்தியோகத்தை விடுத்துச் சிதம்பரம் வந்து வசித்தவர். திருப்புகலூர் அண்ணாசாமி சிவாசாரியாரிடம் சமயதீட்சை பெற்றவர். பின்பு திருவண்ணாமலை ஆதீனத்தைச் சார்ந்து ஞானோபதேசமும் சைவத் துறவும் பூண்டவர். வடமொழியில் பிராசாத தீபிகை, சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, சிவயோகசாரம், முதலிய நூல்களும், வடமொழி பௌஷ்கராகமத்திற்கு ஒரு விருத்தியுரையும், சிவஞானபோத விருத்தியுரையும், சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கு தமிழ் உரையும் எழுதியவர் ஆவர். இவரது மடம் சிதம்பரம் உமையாள்சந்தின் கீழ்ப்பகுதியின் தென்கோடியில் இருந்து வந்தது என்றும், அதில் கி. பி. 1930 வரை யாழ்ப்பாணம் பெரும் புலவர் - துறவி ஸ்ரீ அம்பலவாண நாவலர் அவர்கள் இருந்து வந்தனர் என்று கூறுவர். இந்நாவலர் வடமொழி, அகோர சிவர்பத்ததி - நிர்மலமணிவியாக்கியானம் என்ற நூலை வெளியிட்டவர்கள். இவர்களுக்குப்பின் அவ்வீடம் தற்போது வீடுகளாக உள்ளது.



காளத்தி - மறைஞான சம்பந்தப்பண்டாரம் என்ற ஒரு பெயரே நாளடைவில் காளத்தி - மறைஞானசம்பந்த தேசிகர் எனவும், சிதம்பரம் குகை - மறைஞானசம்பத்தப் பண்டாரம் எனவும், சிதம்பரம் குகை - கண்கட்டி மறைஞானசம்பந்தப் பண்டாரம் எனவும், சிதம்பரம் குகை - கண்கட்டி மறைஞான சம்பந்த நாயனார் எனவும் பற்பலவாறு உலகிலும், அவர்கள் இயற்றிய நூல்களின் பதிப்பிலும் வழங்கப்பெற்று வருகின்றன.

கண்கட்டி மறைஞானசம்பந்தரின் பெருமை :

காளத்தி - கண்கட்டி மறைஞானசம்பந்தப் பண்டாரம் என்பவர், முன்னர் திருக்காளத்தி நகரிலிருந்து தென்னாட்டு யாத்திரைக்குப் புறப்படுமுன் வயது சுமார் 30 ஆண்டும், தென்னாட்டு யாத்திரையில் கழித்தகாலம் சுமார் 10 ஆண்டும் சிதம்பரம் குகை மடத்தில் வாசம் செய்து வந்தது சுமார் 32ஆண்டும், கண்கட்டி மடத்தில் இருந்து அருளாட்சி புரிந்து வந்தது சுமார் 12 ஆண்டுகளுக்கு மேலும் ஆகச் சுமார் 84 ஆண்டுகளுக்குமேல் தமிழ்நாட்டில், சிறப்புறப் பிறர் போற்ற - ஆயிரம்பிறை ‡ கண்டு தரிசித்த பழுத்த சைவ வெள்ளைவேஷ்டித் துறவு நிலை பூண்ட பண்டித (மொட்டை அடித்த) இருமொழியிலும் பெரும் புலமை படைத்த சைவ சமயத்தார்க்கு மிக அரிய பல சைவ நூற்களைத் தந்த மூதறிஞர் ஆவர்.

சிதம்பரம் சைவநன்மக்களும், வைதிகச் சைவர்களும் புகழுமாறு நீண்டகாலம் தமிழ்நாட்டில்விளங்கிய சைவசிகாமணியான குகை - கண்கட்டி மறைஞானசம்பந்தப் பண்டாரம் அவர்கள் எப்பதியோரும் ஏத்தும்படி இருந்தவர்; இகமது தன்னில் சுக முனிவனை ஒப்பவர்; திருவெண்ணெயம்பதியில் மெய்கண்ட தேவன் மண்ணிடை மீண்டும் வருதலை ஒப்பவர்; அருந்தமிழ் உணர்வால் போசராசனையும், புராணம் இயற்றும் அறிவால் சூதமுனிவனையும் ஒப்பவர்; பூவர் முதலியோர் பாடல்அடங்கலும் உணர்ந்த பேரறிஞர். ஆகமபண்டிதர் அருந்தவ சீலர் புகழும் சாஸ்திரம் அனைத்தும் உணர்ந்த சிவஞானி. இவ்வாறு பற்பல வகையாகப் 'பதி, பசு, பாசப், பனுவல்' என்ற நூலுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்த ஆசிரியர் புகழ்ந்து பேசுவர், ஆதலால் அவரது பெருமை அளவிடற் கரியதாம்.

---

‡ ஆயிரம்பிறை தரிசனம் ஆயுள் விருத்தி; இது எண்பது வயதிற்கு மேற்பட்டது. இரண்டு வருஷத்திற்கு இருபத்தைந்து பிறை தரிசனமும், இரட்டை நாற்பது வருடங்களுக்கு ஆயிரம் பிறை தரிசனமும் ஆகும். மதுரை பிட்டு வாணிச்சி வந்தி என்பவளை 'திங்கள் ஆயிரம் தொழுதாள்' எனத் திருவிளையாடல் புராணம் கூறும்.

# திருவெண்காடு ✻ ✻ கீழைத்திருக்காட்டுப்பள்ளி

## திருவெண்காடு

சோழநாட்டில் காவிரிவடகரையில் பூம்புகாருக்கு அண்மையில் உள்ளது இத்தலம். திருவலம்புரம், திருச்சாய்க்காடு, பல்லவனீச்சரம், கீழைத்திருக்காட்டுப்பள்ளி, திருக்கலிக்காமூர் முதலிய தலங்களால் சூழப் பெற்று விளங்குகிறது. இத்திருத்தலத்தின் வடமொழிப்பெயர் சுவேதாரண்யம், (சுவேதம் - வெண்மை - ஆரண்யம் - காடு) என்பதாகும். காசிக்குச் சமமாகச் சொல்லப்படும் ஆறு தலங்களில் முதலாவதாக இத்தலம் குறிப்பிடப்படுகிறது. இத்தலத்தின் மறுபெயர்களை,

"முத்திநகர் தமோநாசபுரம் பாபநாசபுரம் முருகன்பூண்டி
சித்திநகர் பாதாளகயிலாய ஞானவனம் சிவானந்தக்காடு
ஒத்தகண பதிநகரம் ஆதி சிதம்பரம் திருஉமையூர் மாலூர்
மெய்த்தலநா யகம்பெரியமயானம் எனும் பேருடனும்
[ விளங்கிற்றன்றே."

எனத் தலபுராணம் கூறுகிறது. நவக்கிரகங்களில் புதனுக்குரியதலம்.

ஸ்ரீ சுவேதாரண்யேசுவரர், ஸ்ரீ அகோரமூர்த்தி, ஸ்ரீ நடராஜர் ஆகிய மூன்று மூர்த்திகளும், ஸ்ரீ பிரம்மவித்யாநாயகி, ஸ்ரீ காளி, ஸ்ரீ துர்க்கை ஆகிய மூன்று மூர்த்திகளும் சிறப்பாகப்போற்றி வழிபடப்பெறும் மூர்த்திகள் ஆவர். சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று தீர்த்தங்களும் வடவால், கொன்றை, வில்வம் ஆகிய மூன்று தலமரங்களும் சிறப்புடையனவாய் விளங்குவன. சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளியதேவாரத் திருப்பதிகங்களும், மணிவாசகர், கபிலர், பரணர், பட்டினத்தார், சேக்கிழார் முதலியோர் அருளிச்செய்த திருப்பாடல்களும் உள்ளன.

"வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே"

என்று ஞானசம்பந்தரும்,



"வெண்காடே வெண்காடே என்பீராகில்
வீடாத வல்வினைபோய் வீட்டலாமே"

என அப்பர் அடிகளும் அருளிச்செய்வர். ஸ்ரீ மெய்கண்டாரை சமயஉலகிற்கு வழங்கியருளிய பெருமைக்குரியதிருத்தலம். பட்டினத்தார் சிவபூஜை பெற்றுக்கொண்ட தலம். ஐராவதம், துர்வாசர்கொடுத்தமலரைச் சிந்தியதால் தனக்கு ஏற்பட்ட சாபம் நீங்கியதும் இந்திரன் விருத்திராசுரனைக் கொன்றதால் தனக்கு ஏற்பட்ட பிரமபாதகம் நீங்கியதும் ஆகிய புராண வரலாறுகளை உடையது. மற்றும் சுவேதகேது, சுவேதன், வேதராசி ஆகியோரும் வழிபட்டு அருள் பெற்றுள்ளனர். இத்தலப்பதிகப் பாடல்களில் இப்புராண வரலாறுகள் குறிக்கப்படுகின்றன.

### மூர்த்திகள் :

இறைவனுக்கும் அம்பிகைக்கும் தனித்தனிக்கோயில்கள் உள்ளன. நவக்கிரகங்களில் புதனுக்குரிய தலமாதலின் அம்பாள் கோயிலுக்கு அருகில் புதன் கோயிலும் உள்ளது. இறைவன் திருப்பெயர் ஸ்ரீ சுவேதாரண்யேசுவரர். அம்மை திருப்பெயர் ஸ்ரீ பிரமவித்தியாநாயகி. ஆதி சிதம்பரம் என்பதற்கு ஏற்ப நடராஜ சபை சிதம்பரம் போலவே விளங்குகிறது. ஸ்படிகலிங்கம் இரகசியம் எல்லாமே உள்ளன. நடராஜாவிற்கு ஆறு அபிஷேகங்களும் ஆனித் திருமஞ்சனமும் திருவாதிரையும் சிறப்பாக நடைபெறுகின்றன. இத்தலத்தில் புகழ்பெற்ற மூர்த்தியாக விளங்குபவர் ஸ்ரீ அகோரமூர்த்தி. இவருக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் இரண்டாம் காலத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. இது அகோரபூஜை எனப்படும். ஸ்ரீ அகோரமூர்த்தி சந்நிதிக்கு எதிரே ஸ்ரீ பத்திரகாளியம்பாள் விளங்குகின்றார். கிழக்குப்பிராகாரத்தில் ஸ்ரீ துர்க்காதேவி சந்நிதி உள்ளது.

### நடராஜர் :

நடராஜர் திருவுருவ அமைப்பில் பல தத்துவங்களை அறிந்துகொள்ளலாம். 14 சதங்கைகளுடைய காப்பு ஒன்று அவர் காலில் காணப்படுகிறது. ஈரேழு புவனங்களும் அவருடைய அசைவினால்தான் அசையும் என்பதை அது குறிக்கும். இடுப்பில் 81 சங்கிலி வளையங்கள் அமைந்த

அரைஞாண் திகழ்கின்றது. அது பிரணவம் முதல் நம : இறுதியாகவுள்ள 81 பதமந்திரங்களை உணர்த்தும். 28 எலும்பு மணிகள் கோத்து முன்னால் ஒரு பன்றிக் கொம்பும், பின்புறம் ஒரு ஆமை ஓட்டுப் பதக்கமும் உள்ள அணி யொன்றைத் தரித்திருக்கிறார். வேறு ஆபரணம் ஒன்றும் இல்லை. "என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பி லங்க" என்ற சம்பந்தர் கோளறு பதிகப் பகுதியை இது நினைவூட்டி நிற்கின்றது. 28 சதுர்யுகங்கள் முடிந்திருக்கிற தென்பதை 28 எலும்பு மணிகள் குறிக்கின்றன என்றும் கூறுவர். தலையில் மயில்பீலி ( பிஞ்ஞகம் ) இருக்கிறது. கங்கை மீன்போன்ற வடிவத்தில் காணப்படுகிறாள். "பல பல வேடமாக" என்று தொடங்கும் பாடலில், "சலமக ளோடு எருக்கு முடிமேல் அணிந்த" என்றுவரும் பகுதியை நினைவுபடுத்துகிறது. இளம்பிறைச் சந்திரனையும் முடிமேல் அணிந்திருக்கிறார். சோடச கலைகளை உணர்த்தும் 16 சடைகள் உள்ளன. 15 சடைகள் தொங்குகின்றன; ஒன்று கட்டியுள்ளது. நுதல்விழி அழகாகத் தெரிகிறது. இத் தலத்திற்குச் சம்பந்தர் தேவாரப் பதிகத்தின் முதல் பாட்டு முதலடியில் தொடங்கும் "கண்காட்டும் நுதலானும்" என்ற பகுதியை இவர் உருவத்தில் தத்ரூபமாகக் காணலாம். "கண்காட்டிக் கண்ணில் நின்ற மணிஒக்கும்" என்று இத் தல அப்பர் தேவாரப் பதிகத்தின் முதல் பாடலில் அமைந் திருப்பதும் கூர்ந்து நோக்கத்தக்கது. இவர் தோளில் ஒரு சிறு துண்டு துவள்கிறது இடையில் புலித்தோல் உடை காணப்படுகின்றது. இவர் காலின் கீழ் அகப்பட்டிருக்கும் முயலகன் வயிறு மிதியினால் பிதுங்கி இயற்கையாகத் தோன்றுகிறது.

### தீர்த்தம் :

சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்பன தீர்த்தங்களாகும். இவை முக்குளம் எனப் போற்றப்படுவன. திருஞானசம்பந்த சுவாமிகள் தம் தேவாரப் பதிகத்துள் போற்றப்பெறும் தீர்த்தங்கள் இவை, அம்மையார் வேண்டுகோட்படி இறைவன் நடனம் செய்யும் போது இறைவன் திருக்கண்களிலிருந்து விழுந்த நீர்த் துளிகளே இத்தீர்த்தங்கள் என்பர். மக்கட்பேறு விரும் பினோர் இத்தீர்த்தங்களில் நீராடி இறைவனை வழிபட்டு மகப்பேற்றை அடைகின்றார்கள். சிலப்பதிகாரத்தில் கூறப் பெறும் சோமகுண்டம், சூரியகுண்டம் இத்தீர்த்தங்களே என்பர்.



ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், கோவலன்-கண்ணகி வரலாற்றைக் கூறுகிறது. கணவனால் துறக்கப்பட்ட காரிகையான கண்ணகிக்கு தேவந்தி என்ற பார்ப்பனத்தோழி ஒருத்தி உண்டு. அவள் கண்ணகியை நோக்கிக் கூறுவாள், 'பொற்றொடி! காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்துக்கயலதாகிய நெய்தற்கானலிடத்தே சோமகுண்டம், சூரியகுண்டம் என்ற இரண்டு தடாகங்கள் உள்ளன. அவற்றின் துறைகளில் மூழ்கி, காமவேள் கோட்டத்தில்வழிபடும்பெண்கள் இப்பிறப்பில்கணவரொடு பிரிவின்றி வாழ்ந்து, மறு பிறப்பிலும் அவருடனிருந்து இன்பம் நுகர்வர். ஆதலால் யாமும் அவ்வாறு செய்யக் கடவோம்." இதைக்கேட்ட கண்ணகி, "அங்ஙனம் துறை மூழ்கித் தெய்வந்தொழுதல் எங்களுக்கு இயல்பன்று" என்று சொல்லிவிட்டாள். 'இங்கே கூறிய சோமகுண்டமும், சூரியகுண்டமும் முறையே திருவெண்காட்டுள்ள சோமதீர்த்தமும் சூரிய தீர்த்தமுமாமென்று சில பெரியோர் கூறுகின்றனர்' என்று டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் தாம் பதிப்பித்த சிலப்பதிகாரத்தில் ஒரு குறிப் புரை வரைந்துள்ளார்கள். அதை ஈண்டு நினைவுகூர்தல் மிக்க பொருத்தமுடையது. மேலே சொன்ன செய்தியுள்ள சிலப்பதிகாரப் பகுதி வருமாறு :—

கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றின்
மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரியகுண்டந் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநாள்
ஆடுது மென்ற வணியிழைக்கவ் வாயிழையாள்
பீடன் றெனவிருந்த பின்னரே...

(கனாத்திற முரைத்தகாதை 57-64 வரிகள்)

மூன்று தீர்த்தங்களே யன்றி கோயிலுக்குள் கிணறு தீர்த்தங்களும், வெளியே மகதீர்த்தம், சக்கரதீர்த்தம், மணி கர்ணிகை தீர்த்தம், காவிரி தீர்த்தம் முதலிய பல தீர்த்தங் களும் இத்தலத்தைச் சார்ந்தவையாக இருக்கின்றன.

### தல விருக்ஷம் :

வில்வம், கொன்றை, வடவால். வடவாலமரத்தடியில் பிதிர்க்கடனாற்றல் மிக்க பயனளிக்கும் என்பதால் பலர் இம் மரத்தினடியில் பிதிர்க்கடனாற்றுகின்றனர்.

**அகோரமூர்த்தி :**

மருத்துவன் என்ற அசுரன் தேவர்களுக்கு இடர்செய்து வந்தான். தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டனர். பெருமான் அவர்களைத் திருவெண்காடு சென்று வேற்றுருக் கொண்டு வதியும்படியும் தவம்புரியுமாறும் கூறியருளினார். வானுலகில் தேவர்களைக் காணாத மருத்துவன் மண்ணுலகிற்கு வந்து தேவர்களை அறிந்து போர்தொடங்கி இடர் விளைத்தான். பெருமான் இடபதேவரை ஏவினார். தோற்ற மருத்துவன் தவம்செய்து இறைவனிடம் சூலாயுதம் ஒன்றைப் பெற்று நந்திதேவரை எதிர்த்து அவரது கொம்புகளையும் காதுகளையும் அறுத்தான். அச்சுவடுகள் நந்திதேவர் உடலில் இன்றும் உள்ளன. நந்திதேவர் இறைவனிடம் முறையிட்டார். பெருமான் மருத்துவன் மீது சினங்கொண்டர். அப்பெரும் சினமே அகோரமூர்த்தி வடிவாய் வெளிப்பட்டு மருத்துவாசுரனை நெருங்கியது. அவ்வசுரன் பயந்து ஒளி உருவாகி அகோரமூர்த்தியின் திருவுருவிற் கலந்தான். பின்னர் தேவர்களுடைய வேண்டுகோளுக்கிசைந்த அவ்வகோரசிவனார் நடராஜர்சந்நிதியின் அருகில் எழுந்தருளி விளங்குவாராயினார்,

" கருநிற மணிமாலை புனைஅழகும்
வளைஎயிறும் கவினைச் செய்ய
எரிசிகையும் நுதல்விழியும் நடைக்கோல
இணையடியும் இலக எட்டுக்
கர நிலவ மணிபலகை வெண்டலைவாள்
கடி துடியோர் சூலம் ஏற்று
வெருவமருத் துவனை அடர் அகோரசிவன்
துணைப்பதச்சீர் விளம்பு வாமே "

என்பது அகோரமூர்த்தியின் திருவுருவை எழுதிக்காட்டும் தல புராணப் பாட்டு.

**மெய்கண்டார் :**

பெண்ணாகடத்தில் வசித்துவந்த அச்சுதகளப்பாளர் என்னும் சைவ வேளாளர் நெடுங்காலம் மக்கட்பேறின்றி வருந்தித் தமது குலகுருவாகிய திருத்துறையூர் சகலாகம பண்டிதர் என்னும் அருணந்தி சிவாசாரியரிடம் சென்று



விண்ணப்பித்தார். சிவாசாரியார் திருமுறைகளில் கயிறு சார்த்திப் பார்த்தார். திருஞானசம்பந்தர் இத்தலத்திறைவர் மீது பாடியருளிய "பேயடையா பிரிவெய்தும்" என்ற பாடல் உதயமாயிற்று. அதன்படி அச்சுதகளப்பாளர் தம் துணைவியாருடன் இத் தலத்திற்கு வந்து முக்குள நீராடி இறைவனை வழிபட்டார். இறைவன் திருவருளால் களப்பாளர் மனைவி மணிவயிறுவாய்த்தார்கள். சைவசித்தாந்த ஞானபானுவாகிய மெய்கண்டாரை ஈன்றெடுத்தார்கள். பிள்ளைத்திருநாமமாக சுவேதவனப்பெருமாள் என்னும் இத்தல இறைவன் பெயரையே சூட்டி மகிழ்ந்தனர். ஈராண்டு நிறைந்து வீதியில் தளர்நடையிட்டு விளையாடிய இப்பிள்ளையார்தம் பரிபாக நிலையினை உணர்ந்த அகச் சந்தான குரவருள் நான்காமவராகிய பரஞ்சோதி முனிவர் சிவஞானோபதேசம் செய்து மெய்கண்டார் என்னும் தீக்ஷா நாமமும் சூட்டியருளினார். 'சிவஞானபோதம்' என்னும் சைவசித்தாந்தத் தலைமணி நூலைத் தமிழுலகிற்கு வழங்கி சந்தான பரம்பரையினை உருவாக்கி சைவப்பயிர் தழைக்குமாறு செய்தருளினார். இம் மெய்கண்ட சந்தானத்தில் வந்தனவே நம் தருமையாதீனமும் பிற ஆதீனங்களுமாகும். அக்கினி தீர்த்தக்கரையில் மெய்கண்டார்கோயில் உள்ளது.

**சுவேதகேது :**

இவர் உத்தாலக முனிவரின் புதல்வர். தம் வாழ்நாள் 8 வயதோடுமுடியும் என்பதை ஞானத்தால் உணர்ந்து இத் தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டுவந்தார். எட்டு வயது நிறையும் நாளில் எமன் வந்து அவர்மீது பாசக் கயிற்றை வீசினான். பெருமான் வெளிப்பட்டு காலன் வலிமையை அழித்தார். ஞானசம்பந்தர் இவ்வரலாற்றைத் தம் தேவாரப் பதிகத்துள் குறிப்பிட்டுள்ளார்.

**கல்வெட்டுக்கள் :**

இத்தலத்தில் காணப்படும் கல்வெட்டுக்கள் பலவாகும். இவை முதல் இராஜராஜன், இராஜேந்திரன் II வீர ராஜேந்திரன் II குலோத்துங்கன் I விக்கிரமசோழன் இராஜாதிராஜன் I ஆகிய சோழ மன்னர்கள் குலசேகர பாண்டியன், சோமாறவர்மன், விக்கிரமபாண்டியன், சுந்தரபாண்டியன், பராக்கிரமபாண்டியன், ஸ்ரீ வல்லப தேவன் ஆகிய பாண்டிய மன்னர்கள் விருப்பண்ண

உடையார், கிருஷ்ணதேவராயர் என்ற விஜயநகர அரசர்கள் துக்கோஜி என்ற தஞ்சை மகாராஷ்ட்ர மன்னர் முதலியோர் காலத்தில் ஏற்பட்டவை கி. பி. 10 ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 18 ஆம் நூற்றாண்டு வரை உள்ளன.

## திருக்காட்டுப்பள்ளி

சோழவள நாட்டில் பூம்புகாரை யடுத்து விளங்கும் திருவெண்காட்டிற்கு மேற்கே 1 கல் அளவில் விளங்குவது இத்தலம். மாயூரமிருந்தும் சீகாழியிலிருந்தும் திருவெண்காடு செல்லும் பேருந்துகளில் சென்று திருவெண்காட்டில் இறங்கி இத்தலத்தை அடையலாம்.

தஞ்சையை அடுத்து விளங்குவது மேலைத்திருக்காட்டுப்பள்ளி யாதலின் இத்தலம், கீழைத்திருக்காட்டுப்பள்ளி எனப்படும்.

நண்டு பூஜித்த விநாயகர் சந்நிதி இங்கு இருக்கிறது. விநாயகரின் பீடத்தில் நண்டு உருவம் பொறிக்கப்பெற்றுள்ளது.

சுவாமி பெயர் ஸ்ரீ ஆரண்யசுந்தரர். அம்பாள் பெயர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி. • இறைவன் மேற்கு நோக்கியும் அம்பிகை தெற்கு நோக்கியும் எழுந்தருளியுள்ளனர். கோயிலுக்கு வெளியே நான்கு மூலைகளிலும் நான்கு தீர்த்தங்கள் உள்ளன. எதிரே உள்ளது பொய்கை தீர்த்தம். பிரமன் இத்தலத்தில் வியாக்ரபாதேசுவரர், கபாலீசர், அகஸ்தியேசர், முனீசர், சக்ரேசுவரர், பிரமேசுவரர் முதலிய பத்து சிவலிங்கத் திருவுருவங்களை எழுந்தருளுவித்து வழிபட்டனன். இங்குள்ள பிரமேசுவரலிங்கத்தைப் பூஜை செய்தவர்கள் நூறு அசுவமேத யாகம் செய்த பயனை அடைவர்.

இது, ஆரண்ய முனிவர் வழிபட்டு அருள்பெற்றதலம். இதனை விளக்கும் சுவர்ச் சிற்பம் கோயிலின் தென்பால் விளங்குகின்றது. முனிவர் உருவத்துக்கு மேல் பகுதியில் ஆரண்யமுனி என எழுதப்பெற்றுள்ளது. இதற்கு அருகில் மகாகாளர் உருவம் உள்ளது.



இம்முனிவர், மகாகாளரைத் தம் பூஜை முடியுமளவும் காவலாக இருக்குமாறு கேட்டுக்கொண்டு இறைவனை வழிபட்டார் எனவும் அவ்வாறே மகாகாளர் அருகில் இருந்து அரக்கராலும் விலங்குகளாலும் எந்த இடையூறும் உண்டாகாதவாறு காப்பாற்றினார் எனவும் கூறுகின்றனர்.

விருத்திராசுரனைக் கொன்ற பழிநீங்கத் தேவேந்திரன் பூசித்துத் தேவலோக ஆட்சியை மீண்டும் பெற்ற தலம். இதனை "இமையோர் பெருமான் நுண்ணறிவால் வழிபாடு செய்யும்" என இத்தலப்பதிகப் பாடல் தெரிவிக்கிறது. இந்திரன் தேவகுருவாகிய வியாழனை அவமதித்தான். அசுர குருவாகிய துவட்டாவின் மகன் விசுவரூபனைத் தேவகுருவாகக்கொண்டு வேள்வி செய்தான். விசுவரூபன் தேவர்கள் அழியுமாறு வேள்வி செய்ததைக் கண்டு இந்திரன் விசுவரூபனைக் கொன்றான். அவன் தந்தை துவட்டா இந்திரனைக் கொல்லுதற்கு ஒரு வேள்வி செய்தான். வேள்வியில் தோன்றிய விருத்திராசுரனை இந்திரன் ததீசி முனிவரின் முதுகந்தண்டை ஆயுதமாகப் பெற்று அழித்தான். அச்சாபம் இந்திரனைப் பற்றியது. அப்பழி நீங்கிடப் பல தலங்களிலும் இறைவனை வழிபட்ட இந்திரன் திருவெண்காடு, திருக்காட்டுப்பள்ளி முதலிய தலங்களை வணங்கிப் பாவம் நீங்கப் பெற்று தேவலோக ஆட்சியை மீண்டும் பெற்றான். திருவெண்காட்டிறைவர் தைப் பொங்கல் இரண்டாம்நாள் குதிரை வாகனத்தில் இத்தலத்திற்கு எழுந்தருளுகின்றார்.

---

### EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

"It gives me great pleasure to find that the temple is well maintained. The officials take efforts to explain the significance and narrate the historical events with a great deal of patience. I hope this will continue and serve the God-fearing the devotees."

(Sd) K. VENKATASUBRAMANIAM,
Head Master (Gazetted)
Government High Scool, Red Hills,
Madras 52.

13—12—75.

தருமையாதீனம்

## ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்

# மார்கழிமாதத் தல வழிபாடு

மக்களின் ஓராண்டுக்காலம் தேவர்கட்கு ஒருநாள் என்றும் மார்கழிமாதம் தேவர்கட்கு விடியற்காலம் என்றும் அம்முறையில் விடியற்காலம் வழிபாட்டுக்குரிய காலம் என்றும் கூறப்படுகிறது. தேவர்களது அவ் விடியற்காலம் நமக்கு மார்கழி மாதம் முப்பது நாட்களும் ஆகும். ஆதலால் நம்முன்னோர்கள் அம் முப்பது நாட்களையும் வழிபாட்டிற்குரிய நாட்களாகக் கருதியிருக்கின்றார்கள். அதனால்தான் இம்மாதம் பீடுடைய மாதம் என்றும் பேசப்படுகிறது. "மாதங்களுக்குள் மார்கழி மாதமாக இருக்கிறேன்" என்று கிருஷ்ணபரமாத்மா பகவத் கீதையில் கூறியிருப்பதைக்கொண்டும் இதை உணரலாம். இம் மாதத்தில் நம் திருக்கோயில்களில் ஆறுகால பூஜையோடு திருப்பள்ளியெழுச்சி வழிபாடு என்ற வழிபாட்டு முறையை நம் முன்னோர்கள் வகுத்துக்கொடுத்திருக்கிறார்கள். இம்மாதம் முழுவதும் தெய்வ வழிபாட்டில் திளைத்திருந்தால் இவ்வாண்டு முழுவதும் நாம் தொடங்கிச் செய்யும் செயல்களெல்லாம் நன்மையாகவே முடியும் என்பது நம் முன்னோர்கண்ட முடிவு. அம்முறையில் நம் நாட்டிலுள்ள திருக்கோயில்களிலெல்லாம் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு சிறப்பாக நிகழ்த்தப்பெறுகிறது.

தருமையாதீன அருளாட்சிக்குட்பட்ட திருக்கோயில்களிலெல்லாம் இவ்வழிபாடு சிறப்பாக நிகழ்த்தப்பெறுகிறது.

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நாள்தோறும் சிறப்புற நிகழ்த்திய பின்னர், ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டா தசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை திருக்கோயில்களில் வழிபாடு நிகழ்த்தி ஆதீனத் திருக்கோயில்களுக்கும் பிற திருக்கோயில்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் எழுந்தருளி நிகழ்த்தும் இச்சிறப்பு வழிபாட்டின் போது உலக நலங்கருதி சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ



அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்துவித்தும் பரிவட்டங்கள் அணிவித்தும் சுவாமிக்கு ஸ்ரீருத்ர திரிசதி அருச்சனையும், அம்பாளுக்கு லலிதா திரிசதி அருச்சனையும் நிகழ்த்துவித்து வழிபாடாற்றினார்கள்.

உருத்திரத் திரிசதி என்பது வேதம் மூன்றனுள் நடுநாயகமான யசுர்வேதத்தின் ஏழு சாகைகளுள் நடுவில் உள்ள நான்காவது சாகையில் இருக்கும் நமகம் எனப்படும். உருத்திரத்தின் நடுவான ஐந்தாவது ப்ரசனத்தில் உள்ளது பஞ்சாக்ஷரம். பஞ்சாக்ஷரத்தின் முன்னும் பின்னுமாக 300 நம என்ற சொல்லை உடைய உருத்திர மந்திரங்களால் செய்யும் அருச்சனை உருத்திரத்திருசதி என்று பெயர்பெறும். உருத்ரத்தை இடைவிடாமல் கூறி சிவபதம் அடைந்தார் உருத்ரபசுபதி நாயனார். உயர்ந்த பெருமைவாய்ந்த உருத்திரத்தின் சாரமான உருத்திரத்திருசதி அருச்சனையை இறைவனுக்குச் செய்தால் பஞ்சமாபாதகம் செய்தவனாயினும் உருத்ரத்தை ஜபிப்பவன் முக்தியடைகிறான் என்று யக்ஞவல்கியர் என்ற முனிவர் கூறியுள்ளார்கள். உருத்திரத்தின் சாரமான உத்திரத்ரிசதியினால் இறைவனை அர்ச்சித்தால் சகல பாபநீக்கமும் பெற்று முக்தியடைகிறான் என்று உருத்ரபாஷ்யத்தால் அறியப்படுகிறது.

ஸ்ரீ ருத்ர திரிசதி ருத்ரபசுபதிநாயனார் வரலாற்றில் சேக்கிழார் நாயனாரால் சிறப்பாகக் கூறப்படுவதைக் காணலாம். ஸ்ரீ ருத்ர திரிசதி பஞ்சாட்சரத்தின் பெருமையை விளக்குவது.

செம்பொன்னார்கோயிலுக்கு அருகில் உள்ள குமரகோயில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும், சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதப் பெருமானுக்கும், வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் சத்ருசம்கார திரிசதி சண்முகார்ச்சனையாகச் செய்யப்பெற்றது.

திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கப்பெருமானை மூலஸ்தானமாகவும், திருவலஞ்சுழி விநாயகர், சுவாமிமலை ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலங்குடி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, சிதம்பரம் நடராஜப்பெருமான், சீகாழி ஸ்ரீ சட்டைநாதர் (பைரவர்), திருவாரூர் தியாகராஜர் (சோமாஸ்கந்தப்பெருமான்), சூரியனார்கோயில் நவக்கிரகம், திருஆப்பாடி திருப்பைஞ்ஞீலி சண்டிகேசுவரர், திருவாவடுதுறை நந்தி ஆகிய மூர்த்திகளைப் பரிவார தெய்வங்களாகக்கொண்டு வழிபடுவதைச் சைவசமயச் சான்றோர்கள் பின்பற்றியுள்ளனர். மார்கழி மாதத் தல வழிபாட்டில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

அவர்கள் அம்முறையைப் பின்பற்றி அவ்வத்தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்தருளினார்கள்.

### ஆதீனத் திருக்கோயில்களில் :

16, 23, 30—12—75 ஆகிய செவ்வாய்க்கிழமைகளில் வேளூர் ஸ்ரீதையல்நாயகி உடனாய ஸ்ரீவைத்தியநாதசுவாமி திருக்கோயில். 17—12—75 புதன்கிழமை மாயூரம் ஸ்ரீ விசாலாட்சி அம்மை உடனாய ஸ்ரீகாசிவிசுவநாதசுவாமிதிருக்கோயில். 18, 25—12—75 வியாழக்கிழமை மாயூரம் – வள்ளலார்கோவில் ஸ்ரீ ஞானாம்பிகை உடனாய ஸ்ரீ வதான்யேஸ்வரசுவாமி திருக்கோயில், 20—12—75 சனிக்கிழமை தருமபுரம் ஸ்ரீ அபயாம்பிகை உடனாய ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக்கோயில். 21—12—75 ஞாயிற்றுக்கிழமை மணக்குடி ஸ்ரீ சௌந்தரநாயகி உடனாய ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி திருக்கோயில், கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ ஆனந்தவல்லி அம்மை உடனாய ஸ்ரீ சக்திபுரீஸ்வரசுவாமி திருக்கோயில். 22—12—75 திங்கட்கிழமை 2—1—76 வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் ஸ்ரீ அபிராமியம்மை உடனாய ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில். 23—12—75 செவ்வாய்க்கிழமை திருநின்றியூர் ஸ்ரீ உலகநாயகி உடனாய ஸ்ரீலட்மிபுரீஸ்வரசுவாமி திருக்கோயில். 24-12-75 புதன்கிழமை பேரளம் ஸ்ரீ பவானியம்மை உடனாய ஸ்ரீசுயம்புநாதசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

25—12—75 திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் ஸ்ரீ மாயூரநாதசுவாமி திருக்கோயிலிலுள்ள தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், 26—12—75 வெள்ளிக்கிழமை சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமிதிருக்கோயில், திருமுல்லைவாயில்ஸ்ரீகோதையம்மை உடனாய ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி திருக்கோயில். 27—12—75 சனிக்கிழமை திருநள்ளாறு ஸ்ரீ போகமார்த்தபூண்முலையம்மை உடனாய ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில், காரைக்கால் – தருமபுரம் ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி திருக்கோயில், 28—12—75 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி உடனாய ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி திருக்கோயில். 29—12—75 திங்கட்கிழமை குறுக்கை ஸ்ரீ ஞானாம்பிகை உடனாய ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி திருக்கோயில், தலைஞாயிறு ஸ்ரீ கோல்வளைநாயகி உடனாய ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி திருக்கோயில். 31—12—75 புதன்கிழமை குத்தாலம் ஸ்ரீ மிருதுமுகிழாம்பிகை உடனாய ஸ்ரீஉக்தவேதீசுவரசுவாமி திருக்கோயில். 1—1—76 வியாழக்கிழமை ஆச்சாள்புரம் ஸ்ரீதிருவெண்ணீற்றுமையம்மை உடனாய ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி திருக்கோயில்.



2—1—76 வெள்ளிக்கிழமை விளநகர் ஸ்ரீ தோழியம்மை உடனாய ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார்சுவாமி திருக்கோயில். 4—1—76 ஞாயிற்றுக்கிழமை திருப்பறியலூர் ஸ்ரீ இளங்கொம்பனையாள் உடனாய ஸ்ரீ வீரட்டேஸ்வரசுவாமி திருக்கோயில். 5—1—76 திங்கட்கிழமை திருவையாறு ஸ்ரீ தர்மசம்வர்த்தனியம்மை உடனாய ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

### பிற திருக்கோயில்கள் :

25—12—75 வியாழக்கிழமை மாயூரம் ஸ்ரீ அபயாம்பிகை உடனாய ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயில். 28—12—75 ஞாயிற்றுக்கிழமை சூரியனார்கோயில் திருக்கோயில். 30—12—75 செவ்வாய்க்கிழமை திருப்புன்கூர் ஸ்ரீ சிவலோகநாதசுவாமி திருக்கோயில். 3—1—76 சனிக்கிழமை செம்பொனார்கோயிலுக்கு அருகிலுள்ள குமரகோயில் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில். 6—1—76 செவ்வாய்க்கிழமை சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதசுவாமி திருக்கோயில். திருவலஞ்சுழி ஸ்ரீ பெரியநாயகி உடனாய ஸ்ரீ கற்பகநாதேசுவரர் திருக்கோயில். 7—1—76 புதன்கிழமை திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கேசுவரர்திருக்கோயில், ஆலங்குடி ஸ்ரீ ஆபத்சகாயர் திருக்கோயில். ( ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ). 8—1—76 வியாழக்கிழமை கோட்டூர் ஸ்ரீ கொழுந்தீசுவரர் திருக்கோயில். 9—1—76 வெள்ளிக்கிழமை தில்லைவிளாகம் ஸ்ரீ சிதம்பரேசர் திருக்கோயில். இடும்பாவனம் ஸ்ரீ சற்குணநாதேசுவரர் திருக்கோயில். கற்பகக்குளம் ஸ்ரீ கற்பகேசுவரர் திருக்கோயில்கள். 10—1—76 சனிக்கிழமை திருச்செம்பொன்பள்ளி ஸ்ரீ சுவர்ணபுரீசுவரர் திருக்கோயில், ஆக்கூர் ஸ்ரீ தான்தோன்றீசுவரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு எழுந்தருளி வழிபாடு ஆற்றினார்கள்.

### திருக்குவளையில் முசுகுந்தார்ச்சனை :

9—1—76 வெள்ளிக்கிழமை தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ வண்டமருப்பூங்குழலம்மை உடனாய ஸ்ரீ பிரமபுரீசுவரரைத் தரிசித்து ஸ்ரீதியாகராஜப்பெருமானுக்கு ஸ்ரீமுசுகுந்தசகஸ்ரநாமார்ச்சனை செய்வித்து வழிபாடாற்றி வழிபாட்டிற்கு வந்திருந்த பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

### சிதம்பரம் வழிபாடு :

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலுக்கு 19—12—75 வெள்ளிக்கிழமை திருவாதிரையன்று எழுந்தருளி ஆயிரக்கால்

மண்டபத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு லட்டுப் பாவாடை நிவேதனம்செய்து வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள். அன்று சிதம்பரம கனகசபைநகரில் உள்ள தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் நிகழ்ந்த சைவ சித்தாந்த வகுப்பில் கலந்துகொண்ட அன்பர்களிடையே அருளாசி வழங்கினார்கள். 1—1—76 அன்று மீண்டும் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளினார்கள்,

**திருவாரூரில் :**

8—1—76 வியாழக்கிழமை சப்தவிடங்கத்தலங்களுள் முதன்மையான திருவாரூருக்கு எழுந்தருளி ஸ்ரீ புற்றிடங்கொண்டேசுவரரையும், ஸ்ரீ தியாகராஜப்பெருமானையும் வழிபட்டு, சித்தீச்சரம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியையும் தரிசித்தார்கள், பின்னர், அங்கிருந்து கோட்டூருக்கு எழுந்தருளி எட்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பல தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்தத்தையும் தரிசனம் செய்தார்கள்.

அவ்வத்தலங்களிலும் திருக்கோயில் நிர்வாக அதிகாரிகளும் அறங்காவலர்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வணங்கி வரவேற்று வழிபாட்டின்போது தாமும் உடனிருந்து வழிபட்டுப் பயன்பெற்றார்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அறங்காவலர்களுக்கும் வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்களுக்கும் பக்தர்களுக்கும் திருவருட் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

11-1-76 ஞாயிற்றுக்கிழமை உறையூர் ஸ்ரீபஞ்சவர்ணேசுவரர், கற்குடி; உய்யக்கொண்டான் ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி கோயில், திருச்சி மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமானேசுவரர் திருக்கோயில்களுக்கும், 12—1—76 திங்கட்கிழமை வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலுக்கும் 13—1—76 செவ்வாய்க்கிழமை தருமையாதீன ஆன்மார்த்தமூர்த்தி மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை உடனுறை ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் திருக்கோயிலுக்கும், 14—1—76 புதன்கிழமை திருப்பனந்தாள் ஸ்ரீ பிருகந்நாயகி உடனுறை ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி திருக்கோயில், ஆப்பாடி ஸ்ரீ பெரியநாயகி உடனுறை ஸ்ரீ பாலுகந்தநாதர் திருக்கோயில் (ஸ்ரீசண்டிகேசுவரர்) சேய்ஞலூர் ஸ்ரீ சசிதேவி அம்மை உடனுறை ஸ்ரீ சத்தியகிரீசுவரர் திருக்கோயிலுக்கும் எழுந்தருளி வழிபட்டு மார்கழிமாதத் தல வழிபாட்டை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நிறைவு செய்வார்கள்.

---

# செய்திகள்

## தருமையாதீனத்தில் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா, 21—12—75 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. குருமூர்த்த ஆலயத்தில் அன்று காலை மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பக்தர்கள் பலர் வந்து வழிபட்டுத்திருவருள்பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். சைவ சித்தாந்தம் பற்றி அறிய விரும்பும் தொடக்கநிலையில் உள்ளவர்களுக்கும் பயன்படத் தக்கதாக உள்ள 'சித்தாந்தக் கட்டளை' என்னும் நூலை, குருபூஜை விழா மலராக வெளியிட்டு, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அன்பர்களுக்கு வழங்கியருளினார்கள். குருமூர்த்த ஆலயத்தில் காலை மாலை வழிபாட்டிற்குப் பின்னர் சித்தாந்தக்கட்டளை பற்றிய விரிவுரைகள் நடைபெற்றன. டாக்டர், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பி. எச் டி., வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் பி. ஏ, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார், சிரோமணி வித்துவான், திரு, வி. சபேசன், வித்துவான், திருமதி ப. நீலா பி. ஏ, புலவர், திரு. இரா. செல்வக்கணபதி பி. ஏ, வித்துவான், திரு. வே. கண்ணப்பன், திரு. அ. பாலறுவாயன் எம். ஏ; மகாவித்துவான், திரு. தண்டபாணி தேசிகர் ஆகியோர் விரிவுரையாற்றினர். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

## திருக்கடவூர்
## சங்காபிஷேகத் தீர்த்தப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில், திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மை உடனுறை ஸ்ரீ அமுதகடேசப்பெருமானுக்குக் கார்த்திகைச் சோமவார நாட்களில் நிகழ்ந்த 1008 சங்காபிஷேகத் தீர்த்தப் பிரசாதம் வழங்கும் விழா, இவ்வாண்டும் சிறப்பாக நடைபெற்றது.

17-11-75 அன்று நிகழ்ந்த சங்காபிஷேப் பிரசாதம் 18-11-75 அன்று மாலை நிகழ்ந்த கூட்டத்தில் வழங்கப் பெற்றது. விழா அருட்கவி ஸ்ரீதேவி கருமாரிதாசர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. ' சங்குகளில் வலம்புரிச்சங்கு உயர்ந்தது. அவற்றில் பல மூலிகைகளோடு நீரை நிரப்பி வைத்துப் பூஜை செய்து, பெருமானுக்கு அபிஷேகம் செய்த புனித தீர்த்தத்தைப் பெற்று உண்பதால் உயிர் தூய்மை அடைகிறது. திருக்கடவூருக்குச் செல்ல முடியாதவர்கள் அப்புனித தீர்த்தத்தை இங்கே பெறும் பாக்கியம் பெற்றுள்ளார்கள். இதற்கு ஏற்பாடுசெய்துள்ள தருமையாதீனத்திற்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்' என்று தலைமையுரையில் தெரிவித்தார்கள்.

24—11—75 அன்று நிகழ்ந்த சங்காபிஷேகப் பிரசாதம் 25—11—75 மாலை நிகழ்ந்த கூட்டத்தில் வழங்கப்பெற்றது. அன்று ஸ்ரீ வடபழனி ஆண்டவர் தேவஸ்தானம் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. A. S. இராமன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. 'கார்த்திகை மாதத்தில் சோமவார விரதம் இருந்து விமலனைப் பாடிப்பரவி வழிபாடு செய்வது நம் வாழ்விற்கு நலம் பல விளைப்பதாகும். சென்னை நகர மக்களை நல்வழிப்படுத்தவும் இறையருளில் ஈடுபடுத்தவுமே திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசப் பெருமான் சங்காபிஷேக தீர்த்தப் பிரசாதம் கிடைக்கச் செய்திருக்கிறா'கள். இப்பிரசாதம் வழங்கும் விழா தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் கருணை உள்ளத்தைக் காட்டுகிறது' என்று தலைமையுரையில் தெரிவித்தார்கள்.

2—12—75 அன்று திரு. பகீரதன் அவர்கள் ( ஆசிரியர் சத்ய கங்கை ) தலைமையிலும், 9—12—75 அன்று திரு. முத்து அடிகள் அவர்கள் தலைமையிலும், 16—12—75 அன்று தருமையாதீனப் புலவர், திரு. N.R. முருகவேள்M.A ,அவர்கள்தலைமையிலும் விழா சிறப்பாக நடைபெற்றது. பல பச்சிலை மூலிகைகள் சேர்க்கப்பட்ட சங்காபிஷேக தீர்த்தத்தை அருள்வதால் பல நோய்கள் நீங்குகின்றன என்று, திரு பகீரதன் அவர்களும் சங்கில் சுண்ணும்புசத்து இருக்கிறது, அதைப் பஸ்பம் செய்து சிலபேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. சங்கின்மூலம் அபிஷேகம் செய்யப்பெற்ற தீர்த்தத்தை உட்கொள்வதால் ஆரோக்கியமாக வாழ வழிசெய்கிறது என்று திரு. முத்து அடிகள் அவர்களும், சங்காபிஷேக தீர்த்தப் பிரசாதம் வழங்குவது சென்னை மக்களுக்கு நல்வாய்ப்பாகக் கிட்டியிருக்கிறது. இதனால் மக்களுக்குப் பக்தியும் கடவுள் பற்றும் ஏற்படுகின்றன. இதுவும் ஒரு சமயப் பிரசாரமே என்று திரு. N. R. முருகவேள் M. A., அவர்களும் தெரிவித்தார்கள்.



கார்த்திகைச் சோமவார சங்காபிஷேக தீர்த்தப் பிரசாதம் வழங்கும் விழா நாட்களில் வழியாடு நிகழ்த்தியும், திருக்கடவூர்த் திருப்பதிகப் பாராயணம் செய்தும் தீர்த்தப் பிரசாதம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

அன்பர்கள் பலர் விழாவில் கலந்து கொண்டு பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாருவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

## மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் இராட்சச ஆண்டு தைத்திங்கள் 4ஆம் நாள் ( 18—1—76 ) ஞாயிற்றுக்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தன்று திருவெண்காடு ஸ்ரீபிரமவித்தியாநாயகி உடனுகிய ஸ்ரீசுவேதாரண்யேசுவரர் திருக்கோயிலிலும், திருவெண்காட்டிற்கு மேற்கே ஒருகல் தொலைவிலுள்ள கீழைத் திருக்காட்டுப்பள்ளி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி உடனுகிய ஸ்ரீஆரண்யசுந்தரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். அவ்வமயம் திருவெண்காடு-கீழைத்திருக்காட்டுப்பள்ளி திருப்பதிகப் பாராயணமும், விரிவுரையும் அவ்வத்திருக் கோயில்களில் நிகழ்த்தப்பெறும். திருவெண்காடு - கீழைத்திருக்காட்டுப்பள்ளி திருப்பதிகங்கள் என்றநூல் வழங்கப்பெறும். அன்பர்கள் கலந்துகொண்டு வழிபட்டு இன்புறுவார்களாக.

# எதிர்காலம்

ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஆசிரியர்,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

## ( இராட்சசஹு தைமீ 1உ முதல் 30உ முடிய )

## (15—1—76 முதல் 12—2—1976 முடிய)

ஸ்ரீ இராட்சசஹு தைமீ 1உ குருவாரம் உத்தராயண புண்ணியகாலமாகும். இராட்சசஹு மார்கழிமீ 30உ புதவாரம் மிருகசீர்ஷம் நக்ஷத்திரமாகிய தினத்தில் உதயாதி 34 நாழிகை 24 விநாடிக்கு சிம்ம லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் மகர ராசியில் சங்கிரமணமாக தைமாதப் பிரவேசம் செய்கிறார். நீரஸாதிபதி புதனாகிறார். சங்கிரமகால விசேஷ பலனாவது உலகில் சகல ஜனங்களுக்கும் சௌக்கியம் ஏற்படும். பலவர்ண வஸ்திரங்கள் உற்பத்தி அதிகரிக்கும். ஸஸ்ய தானியங்கள் அபிவிருத்தியாகி சகல பொருள்களின் விலைவாசிகள் மலியும். தேசங்களில் எங்கும் மக்கள் வாழ்க்கை முன்னேற்ற வசதிகளுக்கு ஆட்சி நெறியாளர்களால் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயல்படும். உலகிலுள்ள எல்லா தர்மஸ்தாபனங்களும் இயங்கும். தேவாலய திருப்பணி கைங்கர்யங்கள் பலவாக நடக்கும். திருமடங்கள் ஆசார்ய பீடங்களில் உள்ள குருமகான்களின் அருளாசியால் சிஷ்யகோடிகளது சிவத்தொண்டு சிறக்க உலகில் எங்கும் சிவசமயம் பரவும். எங்கும் பிரஜைகள் பக்தி நெறியுடன் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

### 1. மேஷம் — அசுவதி — பரணி — கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபபலனைத் தரும். குடும்பத்தில் ஜீவனவசதி பணவசதி மேலிடும். சகோதரர்கள் சௌக்கியத்துடன் மேன்மையாக இருபபார்கள். வித்துவத்வம் கலைத் துறையில் எழுத்து மூலமான விஷயங்களில் நற்பலன் கிட்டும். தார புத்திரர்களின் க்ஷேமம், பெற்றோர் நலம்



குருமார்களின் ஆசி, புகழ்மாலை ஆகிய நற்பலன்கள் ஏற்படும். வழக்கு விவகாரம் பொருளாதார பிரச்சினைகளில் சாதகமும், ஆதாயகரமும் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் கௌரவ அந்தஸ்துகளைக் கொடுக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

### 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுபமான பலனைத்தரும். பணவசதி சரளமாக இருந்துவரும். சகோதரர்களுக்கு நலம்பல உண்டாகும். பந்து மித்திரர்களின் வருகை உபசரணை நடக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் பாக்கிய விருத்தி முதலிய நற்பலன்களை அளிக்கும். விவகாரத்தில் வெற்றியைத்தரும். பூர்வ சொத்தில் ஓர் ஆதாய பிராப்தியை உண்டாக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் பேரந்தஸ்து ஏற்படும். சனி ஞாயிறு சுபமாகும்.

### 3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமார் பலனாக நடக்கும். திரண்ட பொருள் வரவும் சமச்செலவுமாக இருந்துவரும். குடும்பத்தினர் சுக சௌகரியமாக இருப்பார்கள். வித்துவத்வ கலைத்துறையில் இம்மாதம் 26உக்கு மேல் புதிய ஏற்பாடுகள் நடக்கும். அரசாங்கக் கடிதமூலமாக நன்மைகள் ஏற்படும். விளைநிலத்தில் ஆதாயம் ஏற்படும். சிவந்த பொருள் பிராப்தியடைதலாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் முன் ஆயத்த நடைமுறைகள் தீவிரமாகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனாக நடக்கும். தன பாக்கிய விஷயத்தில் குறைவின்றி இருந்துவரும். சகோதரர்களின் வித்துவத் தொழில் துறைகளில் பிரசித்தம் ஏற்படும். விவசாயத்தில் இயந்திர சாதனங்களில் ஆதாயபலன் இருந்துவரும். குடும்பத்தினர் சுகசௌகரியமாக இருப்பார்கள். தெய்வ சிந்தனை, புராணகாவியம் படித்தல்

ஏகாக்கிர சித்தம் ஆகிய நியமமளிக்கும். உடலில் உஷ்ணாதிக்கம் மூலச்சூடு வந்து குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சிறப்புடன் நடைபெறும். புதன் வியாழன் சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

( ம. மி. மு. மெ. – மோ. டா. டி. டு. – டே. )

சிம்மராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமார் பலனாக நடக்கும். பணவசதி, குடும்பாபிவிருத்தியில்குறை வின்றி இருந்துவரும். சகோதரர்கள் சௌக்கியத்துடன் மேன்மையாக இருப்பார்கள். சிவந்த பொருள்களின் பிராப்தி ஏற்படும். தாரபுத்திரர்களிடையே மனோவேக போக்கும் உடன் அனுசரணையும் ஏற்படுவதாகும். இல்லத்தில் சுப விசேஷங்களே நடக்கும். தெய்வானுக்கிரகத்தால் எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சிறப்பாக நடந்து வரும். வெள்ளி சனி சுபமாகும்.

### 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

( டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். பணவசதி வீடு வாகனங்களின் சௌகரியங்கள் திருப்திகரமாக இருந்துவரும். சகோதரர்களின் தொழில்துறை ஓங்கும். உடலில் அசதி அஜீர்ணம் வந்து குணமாகும். புத்திர நலம் குறித்து ஓர் செலவு ஏற்படும். பிதாவுக்கு விபத்து வந்து தப்பும். தாம்பத்திய வாழ்க்கையில் சுகமும் தெய்வ பக்தி நிறைந்தும் காணும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் புத்திசாதுரிய ஆற்றல் மிகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

( ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே. )

துலாராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமார் பலனாக இருந்து வரும். தனவசதி திருப்திகரமாக இருந்துவரும். உற்றார் உறவினர்களின் மனஸ்தாபம் உண்டாகும். ஆயினும் உடன் சமாளித்து சரிசெய்யும் சாத்வீகத் தன்மையை அளிக்கும். பூர்வீகப் பொருள் அல்லது அரசாங்கம் மூலம் வரவேண்டிய பொருளில் தயக்கமாக இருந்து வந்துசேரும். எல்லாக்காரியங்களிலும் சுறுசுறுப்புத் தன்மையும் புத்திசாதுரிய ஆற்றலும் மிகும்.



வெளியூர் பயணங்கள் ஏற்படும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் இலாபமும் இராசாங்கவனுகூலங்களும் ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

( தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். தனவசதி பெருகும். வாக்கு கௌரவமும் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும் ஏற்படும். சந்தான பாக்கியத்தை ஏற்படுத்தும். சகோதரர் மனைவி இவர்களிடம் ஒவ்வோர் சமயம் மனஸ்தாபம் வந்து கணப்பொழுதில் மாறுதலடையும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் நன்மதிப்பு தரும். சகல காரியார்த்த சித்தியை ஏற்படுத்தும். வியாழன், வெள்ளி சுபமாகும்

### 9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

( யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் மிச்சிர பலனாக நடக்கும். தனம் வரவுக்குமேல் செலவாக இருந்து வரும். சகோதரர்கள் நலமாகவும் உதவிகரமாகவும் இருப்பார்கள். மாதா, மனைவியின் உடல் நலங் கருதி செலவுகள் ஏற்படும். புத்திரர்கள் விஷயத்தில் ஓரளவு திருப்தியும் முன்னேற்றமும் காணும். ஜீவனோபாய தொழில் துறையில் மனமாறுதலான சம்பவங்கள் நேர்ந்து இம்மாதம்பிற்பகுதியில் ஓர்உறுதிப்பாடு நிலைமையாகும். சனீஸ்வரனுக்கு அருச்சனை செய்ய நலம் தரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

### 10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – க. கி. )

மகரராசி 9 பாதங்களும் எழுத்துக்ளும் இம்மாதம் சுமார் பலனாக நடக்கும். தனவசதி திருப்திகரமாக இருந்துவரும். சகோதரர்கள் நலமுடன் இருந்து வருவார்கள். வியாபார நிறுவனங்கள் இயந்திர சாதனங்களில் பிரயத்தனம் மிகும். மாதாவுக்கு இரத்தக் கொதிப்பு வந்து குணமாகும். தாரபுத்திரர்களால் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சரீரத்தில் உஷ்ணாதிக்கமாகவும் வயிறு இதயம் இடுப்பில் வலியும் வந்து குணமாகும். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில்

புகழும் அனுபவசாத்திய நடைமுறையுமாக இருந்துவரும் திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் – பூரட்டாதி $\frac{3}{4}$

( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுமார் பலனை நடக்கும். தனவசதி திருப்திகரமாக இருந்துவரும், தானியவரவு குடும்ப கௌரவம் உன்னதமாக இருக்கும். சகோதரர்நிலைமையில் சிலமாறுதல்கள் சம்பவிக்கும். வித்துவத்வகலைத் துறையில் முன்னேற்றம் ஏற்படும். புத்திரர்களின் தொழில் நலம் இலாபகரமாக இருந்துவரும், மனைவிக்குப் பித்தமயக்கம் வந்து உடன் குணமாகும். குலநலம் காத்தல் பரோபகார காரியங்கள் இவற்றில் தட்ட இயலாத செலவு ஒருபுறம் இருந்துவரும், சகல காரியங்களிலும் ஜெயபிராப்தியாகும். செய்தொழில் அல்லது உத்யோகத்தில் மேலோர் உதவியும் அரசாங்கவனுகூலங்களும் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

### 12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி

( தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் எழுத்துக்களும் இம்மாதம் சுப பலனைத்தரும். தனம் பாக்கியம் விருத்தியாகும். எல்லா விஷயங்களிலும் மனோதிடமும் உறுதிப்பாடும் அளிக்கும். பந்துஜனங்கள் அனுசரணையும் நன்மதிப்பும் ஏற்படும். வாகன சௌகரியம், பசு. பால் கறவை, வீட்டில் மங்கள காரியம் ஆகிய நற்பலன்களை அளிக்கும். புத்திரருக்கு உஷ்ணாதிக்கம் இருமல் போன்ற நலிவு வந்து குணமாகும். கணவன் மனைவியின் ஒற்றுமையும் குடும்ப காரிய சித்தியும் மகிழ்ச்சியளிக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் பிரக்கியாதியை ஏற்படுத்தும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

---

<u>கடிதம் :</u>

ஞானசம்பந்தம் இதழ் வளர்க !

தங்கள் இதழ் இன்றைய சமூதாயத்திற்கு வழி காட்டியாகும்.

V. Velligiri,

2—1—76, காரப்பாளையம்.

227132
சென்னை-600 008

## தை மாதச் சிறப்பு நாட்கள்

15—1—76 வியாழன், உத்தராயண புண்ணியகாலம், சங்கராந்தி, பொங்கல் பண்டிகை, திருவையாறு உத்தராயண தீர்த்தம், திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி அபிஷேகம், சீகாழி ஸ்ரீ உமாமகேசுவரர் புழுகாப்பு, குத்தாலத்தில் ஸ்ரீ சந்திரசேகரர் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல்.

16—1—76 வெள்ளி, மாட்டுப்பொங்கல், கோபூஜை, வைத்தீசுவரன் கோயில் ஸ்ரீ தையல்நாயகி அம்பாளுக்கு சந்தனக்காப்பு நவசக்தி அருச்சனை, ( இவ்வாறு பிரதி சுக்கிரவாரமும் நடைபெறும் ) பௌர்ணமி விரதம், பூஜை, மாதபூஜையில் தேன் அபிஷேகம். தருமை ஸ்ரீ வனதுர்க்காதேவி சம்வத்ஸராபிஷேகம்.

17—1—76 சனி, தைப்பூசம், திருவையாற்றில் புஷ்யதீர்த்தம்.

20—1—76 செவ்வாய், வைத்தீசுவரன்கோயிலில் உண்டிவைத்தல், சங்கடஹரசதுர்த்தி ( முதற்செவ்வாய் ) ஸ்ரீமுத்தையாவுக்கும் ஸ்ரீ ஷண்முகருக்கும் ஷண்முகார்ச்சனை ( இவ்வாறு பிரதி செவ்வாயிலும் நடைபெறும் ).

21—1—76 புதன், சண்டேசுவர நாயனார் குருபூஜை. ஆலவேலி ஸ்ரீ சித்திவிநாயகர் சம்வத்ஸராபிஷேகம்.

22—1—76 வியாழன், தருமை 15 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை. பேரளம் ஸ்ரீ சுயம்புநாதசுவாமி சம்வத்ஸரா அபிஷேகம்

23—1—76 வெள்ளி. வேளூரில் ஸ்ரீ கற்பகவிநாயகர் தைமாத சுக்கிரவார உத்ஸவ ஆரம்பம்.

26—1—76 திங்கள், குடியரசுதினம். விளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

28—1—76 புதன், பிரதோஷம்.

30—1—76 வெள்ளி, சர்வ அமாவாசை. வேளூரில் ஸ்ரீ கற்பக விநாயகர் சுக்கிரவார உத்ஸவ நிறைவு.

1—2—76 ஞாயிறு. வேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு தைச் செவ்வாய் உத்ஸவ ஆரமபம்.

2—2—76 திங்கள், அப்பூதியடிகள் நாயனார் குருபூஜை.

4—2—76 புதன் குத்தாலம் ஸ்ரீஉக்தவேதீசுவரசுவாமி சம்வத்ஸரா அபிஷேகம்.

6—2—76 வெள்ளி, கும்பகோணம் மக உத்ஸவ ஆரம்பம்.

7—2—76 சனி, ரதசப்தமி; திருவாவடுதுறை ரதசப்தமி தீர்த்தம்.

8—2—76 ஞாயிறு, கிருத்திகை விருதம்.

9—2—76 திங்கள். வேளூர்க் கிருத்திகை.

10—2—76 செவ்வாய், கலிக்கம்ப. நாயனார் குருபூஜை. கடைசிச் செவ்வாய் தீர்த்தம்.

11—2—76 புதன். கண்ணப்ப நாயனார் குருபூஜை தருமை அஷ்டாதசபுஜ மஹாலக்ஷ்மிதுர்க்கை சம்வத்ஸராபிஷேகம்.

12—2—76 வியாழன், அரிவாட்டாய நாயனார் குருபூஜை.

## சென்னை, தருமையாதீன சமயப்பிரசா

### திருத்திகைப் பிரசாதம் வழங்

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நி
யாதீன இன்னிசைப் புலவர், சீகாழி திரு. S
அவர்கள் தலைமையில் 20—11—75 அன்று வே
பிரசாதம் வழங்கும் விழா சிறப்பாக நடைெ
கத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி திரு
அர்ச்சனை செய்து வழிபாடு நிகழ்த்தப் பெ
வேளூர்த்திருப்பதிகப் பாராயணம் நிகழ்ந்தது
அவர்கள் தமது தலைமையுரையில் "வேளூர்
அபிராமி அந்தாதி, கந்தரலங்காரம் இவற்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் 'திருமு
பாடவேண்டும் என்று அருளாணையிட்டார்
திருமுறைப்பாடல்களைப் பாடிவருகின்றேன்"
பாடல்களைப்பாடி அனைவரையும் இன்னிசை
அன்பர்கள் பலர் வந்து கேட்டும், வேளூர்
அருட்பிரசாதம் பெற்றும் மகிழ்ந்தனர்

### மாதாந்தர சமயப்பிரசார

"சென்னை, தருமையாதீன சமயப் பிரசா
சமயப் பிரசார வழிபாடு, சென்னை, திருவெ
ராஜசுவாமி தேவஸ்தானத்தில் 30—11—75
மாலை சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ விநாயக
ஸ்ரீ ஆதிபுரீஸ்வரர், ஸ்ரீ வடிவுடை அம்பா
களுக்கு அபிஷேம் அர்ச்சனைகள் செய்தும்
களிலும் தீபாராதனை செய்தும் வழிபாடு நி
இரவு எட்டுமணி அளவில் சமயப் பிரசாரக்
பெற்றது. திரு. சிவகுமார் எம் ஏ. வித்துவா
திரு. வி. என். ஆறுமுகம் ஆகியோர் திரு
களையும், சமயாசாரியர்களுள் ஒருவராகிய
களின் வரலாற்று நிகழ்ச்சிகளையும் திருமுறை
விரிவுரையாற்றினார்கள். நிலைய அன்பர்க
மக்களுமாக நூறுபேர்களுக்குமேல் வழி
டனர். திருக்கோயில் அறங்காவலர் அவ
பிரசாரக் கூட்டம் அடிக்கடி இத்திருக்
வேண்டும், புராதன ஐதீகச் சின்னம் எ
செய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொண்டு
னார்கள்.

Printed & Published by A. Kalyanasundara Desikar, Superin
at the Gnanasambandam Press, Dharmapuram, Mayura